ஆங்கில மருந்துவகைகள்
குழந்தைகளுக்கான
பால்மா வகைகளுக்கு
குறிஞ்சி
மெடிக்கல்'ஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி
(எமக்கு வேறு
கிளைகள் இல்லை)
(35850)

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அன்பளிப்பு
மற்றும்
சகல விதமான
பொருள்களுக்கும்
குறிஞ்சி
மெடிக்கல்ஸ்
பரமேஸ்வாரச் சந்தி,
திருநெல்வேலி
(எமக்கு வேறு
கிளைகள் இல்லை) (35850)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை (28 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 121

# பிரபா வழங்கிய அவகாசம் இன்று காலாவதி; அரச தரப்பு உருப்படியாக செயற்படவில்லை

## நிலத்துள் புதைந்திருந்த கண்ணிவெடிச் சிலிண்டர்!

### பருத்தித்துறையில் நேற்று மீட்பு

வடமராட்சி, மார்ச் 28

பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் முன்னால் நிலத்தினுள் புதையுண்டிருந்த சுமார் நாலரை அடி நீளமான கண்ணிவெடிச் சிலிண்டர் ஒன்று நேற்று முற்பகல் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கண்ணிவெடிச் சிலிண்டர் 1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருந்த வேளை படையினரால் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

துறைமுகப் பகுதியில் — விநாயக முதலியார் வீதியில் — தபால் அலுவலகத்துக்கு முன்பாக உள்ள வீடு ஒன்றின் வாசலுக்கு அருகிலேயே இக் கண்ணிவெடிச் சிலிண்டர் மீட்கப்பட்டது.

வீட்டுக்காரரர் நிலத்தை தோண்டிய சமயம் அதனைக் கண்டார். அதனுடன் ''வயர்'' ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிரத்தை இன்மை பாதக நிலைக்கு இட்டுச் செல்லக் கூடிய ஆபத்து

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ் மக்களின் அன்றாட — அவசிய —பிரச்சினைகள் தொடர்பாக, அரசாங்கம் எடுத்துள்ள முடிவை மீள்பரிசீலனை செய்து —

சாதகமான முடிவுக்கு வருவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவுக்கு, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய அவகாசம் இன்று 28 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது.

தலைவர் பிரபாகரனின் இந்தக் காலக்கெடுவை, உரிய மதிப்புக் கொடுத்து, அதனைச் சிரத்தையுடன் பொருட்படுத்தி உருப்படியாக — ஆக்கபூர்வமாக — செயற்படுவதற்கு அரசு தவறிவிட்டது.

அரசாங்கத்தின் இந்தப் போக்கினால், சமாதானப் பேச்சிலும், மோதல் தவிர்ப்பு நிலையிலும் பாதகமான நிலை தோன்றக்கூடிய ஆபத்து இருப்பதாக அரசியல் நோக்குநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இம்மாதம் ஒன்பதாம் திகதியிட்டு தமக்கு அனுப்பிய கடிதத்திற்கு —

தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் இம்மாதம் 16 ஆம் திகதியிட்டு பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்தில் —

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க நீங்கள் தயக்கம் காட்டுவதே பேச்சுக்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குக் காரணமாகும் —

மிகவும் எளிதாகத் தீர்த்து வைக்கக்கூடிய எமது மக்களின் அன்றாட — அவசிய — பிரச்சினைகளில், உங்களது அரசாங்கம் கடுமையான போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் —

மிகவும் சிக்கலான, மிகவும் கடினமான தேசிய இனப் பிரச்சினையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா என்பதில் எமக்குச் சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டல்லவா? —

எனவே நீங்கள் எடுத்துள்ள முடிவை, சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக, மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ரட்ணசிறியின் யாழ். விஜயம் ரத்து!

வடக்கு கிழக்கு மாகாண புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையிலான விசேட செயலணியின் யாழ்ப்பாண விஜயம் இடம்பெறமாட்டாது என கொழும்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

அந்த விசேட செயலணி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய இருப்பதாக கொழும்பில் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

யாழ்ப்பாணம் செல்வதற்கான அனுமதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடமிருந்து தமக்குக் கிடைக்கவில்லை என்று அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

(ஐ-6)

## பிரிட்டிஷ் கவுன்ஸில் பிரதிநிதி வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச். 28

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் அரசு அன்பளிப்புச் செய்த — சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான உதவிப் பொருள்களை இங்கு நேரடியாகக் கையளிப்பதற்காக பிரிட்டிஸ் கவுன்ஸில் பிரதிநிதியான திரு. கிறிஸ் தோபர் கொஞ் எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

1989 ஆம் ஆண்டு பிரிட்டிஷ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளையில் ஈடுபட்ட பொலீஸார் நால்வர் கைது

சேருநுவர பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பாக அப் பிரிவைச் சேர்ந்த நான்கு பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் நீதிவான் சுவர்ணராஜ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட அந்த நான்கு பொலிஸாரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற இருவரையும், மற்றும் பொலிஸ் உப சேவைப் பிரிவைச் சேர்ந்த இருவரையும் பொலிஸார் தேடிவருகின்றனர். (ஐ-7)

## புறக்கோட்டையில் 25 தமிழர்கள் சனியன்று இரவு பொலீசாரால் கைது

கொழும்பு, மார்ச். 28

புறக்கோட்டை பொலிஸ் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் 25 தமிழர்கள் கடந்த சனியன்று இரவு கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களுடன் நீதிமன்ற பிடியாணையின் கீழ் இருந்த இரண்டு சிங்கள இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

புறக்கோட்டை பொலிஸ் பிரிவின் விசேட பொலிஸ் குழு ஒன்று இரவு வேளை நடத்திய திடீர் ரோந்தின் போது இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை — கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இரவு வேளையில் திடீர் திடீரெனத் தேடுதல் நடத்தும் பொலிஸார் தமிழர்களை கைது செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ராணுவத் தளபதி ஜெரி டி சில்வா மட்டக்களப்புக்கு திடீர் விஜயம்

### படைத் தளபதிகளுடன் விசேட மாநாடு

கொழும்பு, மார்ச். 28

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்புக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

அங்கு அவர் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் விசேட மாநாடு ஒன்றை நடத்தினார். மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியத் தளபதிகள் அந்த விசேட மாநாட்டில் பங்குபற்றினர்.

இராணுவத் தளபதியின் திடீர் விஜயத்தை ஒட்டி மட்டுநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு விமான நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு நகரில் உள்ள பாதுகாப்பு இணைப்பு அதிகாரியின் அலுவலகம் வரையான வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது. பெரும் எண்ணிக்கையான படையினரும் பொலீசாரும் அப்பகுதிகளில் காணப்பட்டனர்.

இராணுவத் தளபதியின் அந்த திடீர் விஜயத்துக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப் படவில்லை. (ஐ-7)

## பல்கலைக்கழக அனுமதி குறித்து முடிவு செய்ய நாளை மாநாடு

### கல்வி அமைச்சர் தலைமையில் நடக்கிறது

93 ஆம் ஆண்டு ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத்தகுதியுடையவர்கள் தொடர்பாக -

இறுதி முடிவை எடுப்பதற்காக நாளை கொழும்பில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறவிருக்கிறது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உயர்அதிகாரிகள் பங்கு பற்றுகின்றனர்.

பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்ட போதிலும், மாணவர்கள் அனுமதி தொடர்பாக இறுதி முடிவை இன்னும் அரசு எடுக்கவில்லை என்றும்—

பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதாக எழுந்துள்ள நிலையை மறுபரிசீலனை செய்ய அரசு முடிவு செய்துள்ளதாகவும்— சொல்லப்படுகிறது.

பல்கலைக்கழக அனுமதிக்கான இறுதி முடிவை எடுப்பதற்காக நாளை நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் நேற்று கொழும்புக்குப் பயணமானார். (அ-3)

## விடுதலைப்புலிகளின் சிந்தனையை புரிந்து கொள்ள முடியாத சந்திரிகா

### அவர் அரசியலுக்கு புதியவர் என்கிறார் பாலசிங்கம்

கொழும்பு, மார்ச் 28

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசியலுக்குப் புதியவர். விடுதலைப் புலிகளையும், அவர்களின் சிந்தனைகளையும் அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

— விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் 'சண்டே லீடர்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசியல்வாதிகள் அல்லாதவர்களையே இங்கு பேச்சுவார்த்தைக்காக அனுப்புகிறார்.

விடுதலைப் போராட்டத்தைப் பற்றியோ, விடுதலைப் புலிகளைப் பற்றியோ அவர்களுக்கு வரலாற்று அனுபவங்கள் எதுவும் இல்லை.

அவர்கள் சந்திரிகாவின் விசுவாசிகளாகவே இருக்கின்றனர். அத்துடன் அவர்கள் தாம் சார்ந்த துறைகளில் வல்லுநர்களாகவே உள்ளனர்.

கட்டடக்கலை பற்றியோ, வங்கித்துறைச் செயற்பாடு பற்றியோ நாம் பேசவில்லை. மிகச் சிக்கலான இனப்பிரச்சினை பற்றியும் அதன் விளைவுகள் பற்றியுமே பேசுகிறோம். ஆகவே இப்பிரச்சினைகளில் ஆக்கபூர்வமான ஈடுபாடு கொண்டவர்களும்— தலைமைகளுடன் நல்ல தொடர்பாடல்களை [illegible] வாக்க கூடியவர்களுமே பேச்சுவார்த்தை[illegible] கொள்ளவேண்டும்.

காலை 10 மணிக்கு 'ஹெலி'யில் வந்து சில மணித்தியாலங்களில் திரும்பிச் சென்றுவிடுவார்கள். இப்படியான நிலைமைகளில் சமாதானத்துக்கான பாதையின் கடினங்களை அவர்களால் எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்.

'ஹெலி'யில் வந்து யாழ்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடல் பகுதியில் இந்திய மீன் பிடிப்படகுகள்

### தொடர்ந்து ஊடுருவல்

வடமராட்சி, மார்ச் 28

இந்திய மீனவர்களின் படகுகள் வடமராட்சிக் கடற்பகுதியில் தொடர்ந்து ஊடுருவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிக்குள் ஊடுருவி தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் ''றோலர்கள்'' வடமராட்சி மீனவர்களின் வலைகளை சேதப்படுத்தி விடுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது மீன்பிடி உபகரணங்கள் சேதப்படுத்தப்படுவது குறித்து மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஐ-173)

## சந்திரிகா இன்று பங்களாதேஷ் செல்கிறார்

கொழும்பு, மார்ச் 28

இந்தியாவுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இன்று பங்களாதேஷ் செல்லவுள்ளார்

[illegible]

(ஐ-7)

## அடுத்த மூன்று மாத காலத்தில் 16,000 ஆசிரியர் நியமனமாவர்

### 11,500 பேருக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, மார்ச் 28

அடுத்த மூன்று மாத காலப் பகுதியில் நாட்டில் உள்ள பாடசாலைகளில் புதிதாகப் 16 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரன இத்தகவலைத் தெரிவித்தார்.

இவர்களில் 11 ஆயிரத்து 500 பேரை உடன் நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவர்களில் 7 ஆயிரத்து500 பேர் சிங்கள மொழி மூல போதனைக்காகவும் —

4 ஆயிரம் பேர் தமிழ்மொழி மூல போதனைக்காகவும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

புதிதாக ஆசிரிய பயிற்சிக்கு சேர்க்கப்படுவோரில் ஜி சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மகளிர் கல்லூரி முன்னால் சேட்டை புரிந்தோர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். நகரின் பிரபல மகளிர் பாடசாலை ஒன்றின் முன்னால் நின்று பாடசாலை முடிவடைந்து வந்த மாணவிகள் மீது பகிடி மற்றும் சேட்டை புரிந்த பத்து இளைஞர்கள் நேற்றைய தினம் தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தவகைச் சேட்டைகளில் ஈடுபடுவோர் மீது அண்மைக் காலத்தில் காவல்துறையினர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது தெரிந்ததே.

இது குறித்து முன்னர் பல

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்களை குணமாக்கும் மூலிகை, இடுப்புப்பட்டி!

கொழும்பு, மார்ச். 28

'முடக் குன்றுப்பு நோய்களை குணமாக்கும் பெண்களுக்கான இடுப்புப் பட்டி ஒன்று மூலிகைகளினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய சீனமருத்துவத்துக்கான பீகிங் கல்லூரியின் பேராசிரியர் லாய் ஹாய்வு என்பவரின் கண்டுபிடிப்புகளில் ஒன்றான 'இந்த மூலிகை இடுப்புப்பட்டி மிகவும் பெறுமதி மிக்க, விசேடமாக தெரிவு செய்யப்பட்ட இயற்கை மூலிகைகளினாலேயே தயாரிக்கப்படுகின்றது.

இரத்தோட்டத்தை துரிதப்படுத்துதல் ஈரல், சிறுநீரகம், ஏனைய வயிற்றுறுப்புகள் ஆகியவற்றின் இயக்கத்தை தீவிரப்படுத்துதல், நோய் எதிர்ப்புச்சக்தியை ஏற்படுத்துதல், பெண்கள் சம்பந்தப்பட்ட கோளாறுகள், முதுகுவலி போன்றவற்றை நீக்குதல், உற்சாகமின்மையை நீக்கி சுறுசுறுப்பாக்குதல் போன்றன இந்தப் பட்டியின் நிவாரணங்கள் ஆகும்.

இத்தகைய பட்டிகள், இன்று நூற்றுக்கணக்கான நாடுகளில் லட்சக்கணக்கான மக்களின் நோயை குணப்படுத்தியுள்ளனவாம். (ஒ-14)


WANTED

Teachers To Teach
**Chemistry and Zoology**
in the Adv. level Classes

**Apply before 5th April to**

**The Principal**
Jaffna College,
Vaddukkoddai.

[C-645]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 07 — 1914

உதிர்வு: 08 — 04 — 1994

திருமதி
**இராசபிள்ளை சின்னத்தம்பி**

திதி: திரியோதசி 28-3-1995

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம் மனத் திரையில் பசுமையாக நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (35905)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் கதிர்காமு தம்பித்துரை**
(இலங்கை போக்குவரத்துச் சபைச் சாரதி)

தோற்றம்: 21 — 06 — 1945

மறைவு: 26 — 02 — 1995

பாசத்தின் பிறப்பிடமான எங்கள் அத்தான்
பண்புடன் குடும்பநாயகனாய் எமை வழிநடத்தி
இன்ப துன்பங்களை தந்துணிவுடன் ஏற்று
குடும்பத்துக்கு ஒளி வீசிய எங்கள் குல தெய்வமே
எங்களை ஆறாத்துயரில் விட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ
அத்தான் நீங்கள் எங்கள் கண்களில்
நின்று மறைந்தாலும் மனத்திரையில்
எப்பொழுதும் மலர்ந்து கொண்டே இருப்பீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனிடம் கண்ணீர்ப் பூக்களால் வேண்டுகிறோம்.

இன்று (28 - 3 - 95) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கு பற்றும்படி உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மச்சான்மார்.

விளாத்தியடி,
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். [35922]

# வாக்குறுதிகளை சந்திரிகா மீறினால் எமது ஆதரவு அர்த்தமற்றதாகிவிடும்

## பிரதி அமைச்சர் சந்திரசேகரன் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 28

''சந்திரிகா கபடத்தனமாக நடக்கமாட்டார் என்ற நம்பிக்கையோடு தான் நாம் அவர்களுக்கு ஆதரவு அளித்தோம்; ஆனால் அந்த நல்லெண்ணத்தைக் கெடுப்பது போல் அவர் செயற்பட்டால் இந்த அரசுக்கு நாம் வழங்கும் ஆதரவு அர்த்தமற்றது ஆகிவிடும்.''

— மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பெருந்தோட்ட வீடமைப்பு பொது வசதிகள் பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அட்டன், வெலிஓயா மேற்பிரிவு தோட்டத்தில் நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி விடயம் தொடர்பாக, தேர்தலுக்கு முன்பே நாம் திருமதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம்.

அப்போது இக் கல்லூரியை மலையக மக்களுக்கு வழங்குவதென அவர் ஒத்துக் கொண்டார்.

தேர்தலின் பின் இந்த அரசுக்கு ஆதரவு வழங்குவதென முடிவு செய்த போதும் இதே கோரிக்கையை முன் வைத்தோம்.

அப்போது எமது கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்; அந்த நம்பிக்கையிலேயே எமது ஆதரவை வழங்கினோம்.

இரண்டு சந்தர்ப்பங்களில் இவ் விடயம் தொடர்பாக பேசப்பட்டது. அப்போது அவர்கள் எமது கோரிக்கையை ஒத்துக் கொண்டார்கள்; அதனை மறுக்கவும் முடியாது.

ஏனெனில் நாம் கேட்பது நியாயமான கோரிக்கை; அதில் அதர்மம், பாரபட்சம் என்பன கிடையாது; நாங்கள் நீதியானதையே கேட்கிறோம்.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பும் திருமதி சந்திரிகாவை நாம் சந்தித்தோம்.

இக்கல்லூரி விடயமாக நீங்கள் சொன்ன வாக்குறுதியை மீறப் போகிறீர்களா? ஒத்துக் கொண்ட விடயத்தில் இருந்து நழுவப் போகிறீர்களா? என்று நாம் கேட்டோம்.

இல்லை; கொடுத்த வாக்கை மீற மாட்டேன் என்று அவர் எமக்குத் தெரிவித்தார்.

ஆனால் தற்போது கல்வி அமைச்சிலேயே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகத் தெரிய வந்துள்ளது.

முன்பு போல இயங்க வைக்கவே இப் பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரசுக்கு நாம் கொடுக்கும் ஆதரவு அதன் தலைமை தந்த உத்தரவாதத்தை நம்பியே; அந்த உத்தரவாதத்திற்கமைய வெளிப்படையாக நடந்து கொள்வார்கள் என நம்பியே.

ஆனால் எமது நல்லெண்ணத்தை கெடுப்பது போல் செயற்பட்டால், நாம் அரசுக்கு வழங்கும் ஆதரவில் அர்த்தம் இல்லை.

எமது மக்களின் கோரிக்கைகள், தேவைகள் ஏதாவது ஒரு மட்டத்தில் தீர்க்கப்பட்டால் தான் அரசுடன் இணைந்திருக்க முடியும்.

இது தள்ளிப்போடக் கூடிய சாதாரண விடயம் அல்ல; ஆகவே முன்னணி யாருக்கும் தனது ஆதரவை வழங்கும்.

இந்த அரசினால் நமக்கு ஏதும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கும் வரை இந்த அரசை நாம் ஆதரிப்போம்.

அரசுடன் நாம் மேற்கொண்ட பேச்சுக்கள் சில கசப்பு உணர்வுகளைத் தோற்றுவித்துள்ளன. ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி விவகாரமும் இத்தகையதே.

சிங்கள மக்களுக்கென நாடு முழுவதும் பல கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் மலையகத் தமிழ் மக்களுக்கென சகல வசதிகளையும் கொண்ட ஆசிரிய பயிற்சிக் கலாசாலை எதுவும் இல்லை.

இக்குறையைப் போக்கவென ஜெர்மன் அரசு தனது செலவில் மலையக தமிழ் மக்களுக்கென இந்த ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியை அமைத்துத் தந்தது.

ஆனால் மலையக மக்களுக்கென கட்டப்பட்ட இக்கல்லூரியில் மலையகத்தவர்களுக்கு 50 வீதமும், சிங்களவருக்கு 25 வீதமும், வட, கிழக்கு பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு 25 வீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இது தர்மமான செயல் அல்ல— இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-5)

### மரணம்

குளத்தில் குளிக்கச் சென்றவர் தாமரைக் கொடியில் சிக்கி மரணமான சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளாலியில் இடம் பெற்றுள்ளது.

கிளாலி இறங்குதுறையில் தொழிலாளியாக வேலைசெய்யும் மயிலிட்டியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு மரணமானவராவார். (இ-5-117)

# இந்திய அமைதிப் படை அங்கோலா செல்கிறது

புதுடில்லி, மார்ச் 28

ஐ. நா. சபையின் வேண்டுகோளையடுத்து அங்கோலாவுக்கு தனது அமைதிப் படையை அனுப்ப இந்தியா முடிவு செய்துள்ளது.

வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா நேற்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

800 இராணுவத்தினரும், 214 பொறியியல் வல்லுநர்களும் இந்திய அமைதிப் படையில் இடம் பெறுவர்.

இவர்களுடன் 19 இராணுவ பார்வையாளர்களும் 18 காவல்துறைப் பார்வையாளர்களும் செல்வர்.—

இந்தப்படையினர் முதற் கட்டமாக அங்கு 6 மாத காலம் பணிபுரிவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# கிளாலியில் திருடிய மூவருக்கு தண்டனை

யாழ்ப்பாணம், மார்ச் 28

கிளாலி இறங்கு துறையில் வைத்து, 39ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருள்களை திருடிய மூவருக்கு 2மாத கால சிறைத் தண்டனையும், குற்றப்பணமாக 4ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. தவறின் 160நாட்கள் கட்டாய சமூகசேவை செய்ய வேண்டும் என்றும் அத்துடன் மீட்கப்படாத பொருள்களுக்கு தலா ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் அண்மையில் இது தொடர்பான வழக்கு நடைபெற்றது.

வழக்கை விசாரித்த பின் மாவட்ட நீதியாளர் திரு. க. கடர் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினார்.

அளவெட்டியைச் சேர்ந்த ஒருவரும், பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த இருவருமே இந்த வழக்கில் எதிரிகள் ஆவர்.

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஒருவரே பொருள்களைப் பறி கொடுத்திருந்தார். [இ-5]

### நடுக்கடலில் படகு மூழ்கியது

தென்மராட்சி மார்ச் 28

ஆலங்கேணியில் இருந்து சுமார் இரண்டு இலட்சரூபா பெறுமதியான பொருள்களை ஏற்றி வந்த படகு ஒன்று நடுக்கடலில் மூழ்கியது.

இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

படகுடன், படகோட்டியும் கடலுள்மூழ்கித்தத்தளித்தார்.

அவ்வேளை அவ்வழியால் வேறொரு படகில் வந்தவர்கள் அவரைக் காப்பாற்றி கரைக்கு கொண்டு வந்தனர். (இ-5-117)

### ஆலயங்களில்

பளை கச்சாய் வெளி முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய் பிற்பகல் ஆரம்பமாகி நாளை புதன்கிழமை காலை நிறைவுபெறும். (ஐ-11)

### பாடசாலைகளில்

யாழ். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலையின் பிரதமபகுதி அதிபர்திரு. வே. சிவானந்தன் தலைமையில் நடைபெறும். சங்கானை கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [ஒ-152]

★ ★ ★

தென்மராட்ச்சி, மார்ச் 28

சாவகச்சேரி கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு அதிபர் சோ. அருளம்பலம் தலைமையில் நடைபெறும்.

முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிப்பணிப்பாளர் திரு. நா. சத்தியநாதன் கலந்துகொள்வார். (ஐ-117)

### மருதடி விநாயகர் கொடியேற்றம் நாளை

சண்டிலிப்பாய், மார்ச் 28

சரித்திரப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை புதன்கிழமை பகல் பதினொரு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

ஏப்ரல் 7 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும்

ஏப்ரல் 14 ஆம் திகதி, சித்திரைப் புதுவருடத் தினத்தன்று பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் விசேட உற்சவங்களாக நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும் மாலை வேளையில் ''விநாயக புராணம்'' என்ற பொருளில் திரு. ஆறு. திருமுருகன் சொற்பொழிவும் இடம் பெறும்.

செண். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் முதலுதவிச் சிகிச்சை முகாம் வழமை போல இம்முறையும் ஆலய வீதியில் செயற்படவுள்ளது. விசேட சுகாதார, போக்குவரத்து, பாதுகாப்பு வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ-135-152)

### பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம், கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்திய பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஏப்ரல் 9 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு. யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெறவுள்ளது.

இதுவரை இது தொடர்பான அறிவுறுத்தல்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகளின் அதிபர்கள் இராமகிருஷ்ணாலய பணிப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5)

# வாழ்வை வளம்படுத்தும் வழிகளை எடுத்து இயம்புவன திருமுறைகள்

## திருமுறை விழாவில் நல்லை குருமுதல்வர்

வாழ்க்கையை வளம்படுத்தும் பாடல்களாக திருமுறைகள் அமைந்துள்ளன. நாயன்மார்கள் வாழ்க்கையை வளம்படுத்தும் வழிமுறைகளில் வாழ்ந்து காட்டி, பாடல்கள் மூலம் அவற்றை பின் பற்றி நாமும் வாழ வழி செய்துள்ளார்கள். எதிர்கால சமுதாயத்தினர் திருமுறைகளை எந்த வகையில் பயனுள்ள தாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கவே இவ் விழா நடைபெறுகிறது. எமது மண்ணையும், எமது சமயத்தையும் பெருமைப் படுத்த எடுக்கும் விழாவாகவும் இது அமைகிறது.

இணுவிலில் நடைபெற்ற திருமுறை பெருவிழா ஆரம்ப நாளன்று ஆசியுரை வழங்கிய நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

இணுவில் கந்தசுவாமி கோயில் இளம் தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் விழா நடைபெற்றது.

விழாவின் ஆரம்பத்தில் நாதஸ்வர தவில் கலைஞர்களின் மங்கள இசையுடன் திருமுறை தந்த திருத்தொண்டர்களின் உருவப்படங்கள் இணுவில் அருணகிரிநாத சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் இருந்து இரதபவனியாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டன. ஓய்வுபெற்ற, கோப்பாய் ஆசிரிய கலாசாலை உப அதிபர் திரு. பொன் தெய்வேந்திரன் தலைமையில் முதல் நாள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ பரமானந்த சிவாச்சாரிய சுவாமிகள் மேலும் பேசுகையில் —

திருமுறைளிகல் உள்ள உண்மைப் பொருளை மக்களுக்கு உணர்த்த வேண்டும். சைவத்தையும், தமிழையும் எதிர்கால தலைமுறையினர் உரிய முறையில் பயிலவும் பேணவும் வகை செய்யவேண்டும். என்பதற்காகவே இவ் விழா எடுக்கப்படுகிறது.

வாழ்க்கைக்கு ஏற்றவாறு திருமுறைகள் அமைவதால் வயதானவர்கள் மட்டுமல்ல சிறுவர் முதல் கொண்டு சகலரும் திருமுறைகளை பயில வேண்டும் என்றார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது ஆசியுரையில்

திருமுறைகள் பாடுவதற்குத் தான் உரியன. பாடினால் தான் அதன் சுவையை பெறலாம் பாடும் போது எம் உணர்வுகள் மீட்சி அடைகின்றன.

தமிழகத்தில் ஆண்டு தோறும் கருத்தரங்குகள் நடைபெறுவது போல இங்கும் இப் பெருவிழா நடைபெறுகின்றது. திருமுறைகள் தெய்வீகமான ஒழுங்குக் குரியவை எனக் கூறினார்.

அகிலஇலங்கை கம்பன் கழக அமைப்பாளார் திரு இ. ஜெயராஜ் தமது வாழ்த்துரையில்.

நாம் பேசுகின்ற அளவுக்கு பொருளோடுஒன்றுவதில்லை. சைவ உலகம் இன்று அனுபூதி மான்களை நாடி நிற்கின்றது. சமய உண்மைகளை பற்றி கூறிய நிறைமொழி மாந்தரின் வார்த்தைகளை நாம் பின்பற்றவில்லை. அறிவு எல்லைக்குள் அகப்படாத ஆண்டவனைப் பற்றி ஆராய்ச்சி பண்ணமுடியாது.

எமது சமயத்துக்கு இன்று பல்வேறு இடர்கள் சூழ்ந்துள்ளன. இவற்றைக்களைய அனுபூதிமான்கள் தோன்றும் சூழ்நிலையை நாம் தோற்றுவிக்க வேண்டும் என்றார்.

சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கத்தின் பண்ணிசை மற்றும் திருமுறை அரங்கு சிறப்பு சொற்பொழிவு, நாட்டிய நாடகம் ஆகியனவும் விழாவில் இடம்பெற்றன. (இ-5-152)

# மறைமலை அடிகள் - கி. ஆ. பெ தமிழே மூச்சாக வாழ்ந்தவர்கள்

## தமிழ் பேரறிஞர் நினைவுச் சொற்பொழிவில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 28

''பெறற்கரிய நாட்டையும் வளர்த்த மொழியையும், பயிற்றுவித்த பள்ளியையும் பெருமை அடையச் செய்ய வேண்டிய பொறுப்பு மாணவர்களையே சாரும்'' என்ற கி. ஆ. பெ. விசுவநாதத்தின் கூற்று இன்றைய நம் மாணவர்களுக்கும் பொருந்தும்

கிளிநொச்சி தமிழ்ச்சங்க ஆதரவில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த தமிழ்ப் பேரறிஞர் நினைவு சொற்பொழிவில் சிறப்புரை வழங்கிய சங்கச் செயலாளர் திரு வே. பரமநாதபிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில், தமிழ் மொழி, தமிழ் [illegible] மக்கள் பற்றிய எண்ணமே பேச்சாகவும், மூச்சாகவும் வாழ்ந்தவர்கள் கி. ஆ. பெ விசுவநாதமும் மறை மலை அடிகளாரும்.

உலகின் எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு மாநிலத்திலும் அவரவர் தாய் மொழியில் தான் கல்விமுறையுள்ளது.

ஆனால் தமிழ் நாட்டில் மட்டுமே பிறமொழிக் கல்வியுண்டு என வேதனையுற்றார் கி. ஆ. பெ அவர்கள்.

அலுவலகங்களில் தமிழை அமுல்படுத்தக் கோரி 95 வயதில் தமிழக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர் இவர்— என்றார்

மறைமலை அடிகள் பற்றிக் குறிப்பிடுகையில் தமிழ்மொழி ஆரியத்தோடு இரண்டறக் கலந்து அழியாமல் பாது[illegible] அடிகளைச் சாரும்.

[illegible] தமிழ் நடை என்பது அவர் திருப்பி விட்ட ஒரு பெருந்திருப்பம்.

அவர் தமிழ் மக்களுக்கு காட்டிய புதுவழியே இன்று நாம் பேசும் தூய தமிழ்.

தூய தமிழ் எழுதுவதற்கும் நமது குழந்தைகளுக்கு தூய தமிழைப் பேசவைப்பதற்கும் இவர் காரணமாயிருந்தார்.

தமிழர் திருமணங்கள் தமிழிலே நடைபெறுவதற்கும் தமிழர் மதமாகிய சைவசமயத்தைப் பாதுகாப்பதற்கும் பல மாநாடுகளைஇவர் நடத்தினார் — என்றார்.

பரந்தன் இந்து மகா வித்தியாலய அதிபர் வே. க. பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் உதவிக்கல்விப் பணிப்பாளர் [illegible]. ச. குருகுலராசாவும், செல்வி தயா பொன்னையா ஆகியோரும் உரையாற்றினர். [இ-14]


தாவடி அருள்மிகு
அம்பலவாண வேதவிநாயகர்
தேவஸ்தானம்

மகோற்சவகால
**தெய்வீகப் பேருரைகள்**

**18** தினங்கள்

ஆரம்பம்: 29 - 03 - 1995 புதன்கிழமை
இரவு 8-30 — 9-30

பொருள்:
**திருவிளையாடல் புராணம்**
விநாயகர் புராணம்
திருமூலர் தவமந்திரம்

நிகழ்த்துபவர்: கம்பகலாசுரபி
த. சிவகுமாரன்
அமைப்பாளர் காரைநகர் கம்பன்கழகம்
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

[35913] தேவஸ்தான பரிபாலனசபை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவில் நிலக்கண்ணிவெடி: 8 காங்கிரஸ் தொண்டர்கள் பலி!

## தெலுங்கு தேச உறுப்பினர் மீது சந்தேகம்

புதுடில்லி, மார்ச் 28

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலக்கண்ணித் தாக்குதல் ஒன்றில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த எண்மர் உயிரிழந்தனர்.

ஆந்திராவின் அனந்தப்பூர் மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உள்ளூர் காங்கிரஸ் கட்சித் தலைவர் நாரப்பரெட்டி அவரது மூன்று புதல்வர்கள் மற்றும் ஆதரவாளர்களே கண்ணி வெடியில் பலியானவர்கள் ஆவர்.

இந்த கண்ணி வெடிச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்குச் சமீபமாக அடையாளம் காணாத தெலுங்கு தேசக் கட்சித் தொண்டர் ஒருவரின் சடலமும் கண்டு பிடிக்கப்பட்டது.

பிரஸ்தாப தெலுங்குதேசத் தொண்டரே கண்ணி வெடியை வைத்திருக்கலாம் என்றும் —

அவரும் அதில் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்றும் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பரில் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் என். ரி. ராமராவ்வின் தெலுங்கு தேசம் கட்சி அமோக வெற்றியீட்டியது தெரிந்ததே.

ஆந்திரா பிரதேசம் பிரதமர் நரசிம்மராவ்வின் சொந்த மாநிலம் ஆகும். (இ)

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வழிபாட்டு தலங்களுக்கு நஷ்டஈடு

## விவரம் சேகரிக்கப்படுகிறது

வலிகாமம் தெற்கு, மார்ச் 28

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மத வழிபாட்டுத் தலங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட உள்ளதாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிரதேச சபைகளினூடாகவும் அவ்வப்பகுதிகளில் பாதிக்கப்பட்ட வணக்கத்தலங்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளர் திரு. ச. சண்முகலிங்கம் —

மத வழிபாட்டுத் தலம் ஒன்று வன்செயல் காரணமாக சேதமுற்று இருப்பின் அதற்கான நிவாரணத்துக்காக விண்ணப்பிக்கலாம் எனவும் —

அவ்விண்ணப்பப்படிவம்வழிபாட்டுத்தலத்தின் நம்பிக்கை சபைத் தலைவர் அல்லது நிர்வாகி மூலம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் —

தத்தம்பகுதி கிராமசேவகர்களூடாக ஆலய நிர்வாகிகளுக்கு இதனை தெரியப்படுத்தி நிவாரணத்தைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய, வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. த. தேவராஜன் இது சம்பந்தமாக இப்பகுதியில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்கு தெரியப்படுத்தி விண்ணப்ப படிவங்களை விநியோகித்துள்ளார். (ஒ-152)

### பெறுமதி மிக்க முத்திரைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். பிரதம தபாலகத்திற்கு ஆயிரம் ரூபா. ஐந்நூறு ரூபா. நூறுரூபா போன்ற பெறுமதி மிகக முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளன.

கப்பலில் அனுப்புவதற்கு வசதியாக

# கடிதங்களை செவ்வாயன்று தபாலில் சேர்த்து விடுக!

வெளி மாவட்டங்களுக்கான தபால்கள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் திருகோணமலை செல்லும் 'சிடான்சர்' கப்பலில் இங்கிருந்து அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதனால்—

வெளியூர் தபால்களை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாலை 4மணிக்கு முன்பாக தபால் பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலக பிரதி அஞ்சல் அதிபர் எம். ஜெயசுந்தரம் கேட்டுள்ளார்.

இதற்கமைய இன்று மாலை 4மணிக்கு முன் வெளியூர் தபால்களை தபால் பெட்டியில் சேர்க்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஒ-17)

மருதங்கேணி கோட்டத்துக்கு

# போதிய பாடப்புத்தகங்கள் இன்னும் வந்துசேரவில்லை

வடமராட்சி, மார்ச் 28

பாடசாலை மாணவர்களுக்கான இலவசப்பாடப்புத்தகங்கள் மருதங்கேணிகல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு போதியளவு வந்து சேரவில்லை.

பதினோராம் ஆண்டுக்கான ஆங்கிலப்பாடப்புத்தகம், ஆங்கிலஇலக்கியப் புத்தகம், சமூகக்கல்வி பாடத்திற்கான தேசப்படப்பயிற்சிப் புத்தகம், இவ்வாண்டே முதன் முதல் வந்துசேர்ந்த ஆண்டு ஒன்றிற்கான கணித செயல் நூல் ஆகிய புத்தகங்கள், மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்கள் எவருக்கும் இதுவரை கிடைக்கவில்லை.

அதேவேளை, ஏனைய பாடப்புத்தகங்களும், குறைந்தளவே கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது. (ஒ-173)

### சைக்கிள்களுக்கு இலக்கத்தகடு

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சிப்பகுதியிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களில் இவ்வாண்டுக்கான சைக்கிள் இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைகளிலும், பருத்தித்துறை பிரதேசசபை, கரவெட்டி பிரதேச சபைகளிலும் அவற்றின் உப அலுவலகங்களிலும் வைத்து இலக்கத்தகடுகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. [ஒ-173]

லஞ்ச, ஊழல் விசாரணைக்குழு

# இலங்கை வங்கி விவகாரமே முதலில் விசாரிக்கப்பட்டது!

லஞ்ச ஊழல் விவகாரங்கள் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஆணைக்குழு, இலங்கை வங்கி சம்பந்தமான விடயங்களை அடுத்த மாத நடுப்பகுதியில் சமர்ப்பிக்கவுள்ளது

லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பரிசிலனைக்கு எடுக்கப்பட்ட முதலாவது விசாரணை இலங்கை வங்கி விவகாரமாகும்.

இது சம்பந்தமான விசாரணைகள் தற்போது முடிவடைந்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் டி ஏ. டி. எஸ். விஜேசுந்தர தலைமையிலான மூன்று அங்கத்தவர் கொண்ட இந்த விசாரணைக் குழுவில் ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதியரசர் சிவா. செல்லையா, ஓய்வுபெற்ற கணக்காளர் நாயகம் ஜீ. எம். டபிள்யூ. விஜேசூரிய ஆகியோர் அங்கம் வகிக்கின்றார்கள். [ஒ-5]

# வடமராட்சி கிழக்கில் மலேரியா பரவுகிறது

வடமராட்சி, மார்ச் 28

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மலேரியா காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது.

மருதங்கேணி அம்பன் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் இந்நோய்க்காக சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

மருதங்கேணி மருத்துவமனையில் மலேரியா நோயை கண்டு பிடிப்பதற்கான, இரத்த பரிசோதனைப் பிரிவு இயங்காமையினால், நோயாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாக வேண்டியும், நோயைக் கண்டு பிடித்து சிகிச்சை பெற முடியாத நிலையும் காணப்படுகின்றது. (ஒ-173)

### தப்பி ஓடிய சிப்பாய் சிக்கினார்!

கொழும்பு, மார்ச் 28

இராணுவத்தில் கடமையாற்றி கடந்த 1991 ஆம் ஆண்டு தப்பிஓடியதாகக்கூறப்படும் ஒருவர் கண்டிப்பகுதியிலுள்ள அவரதுவீட்டில் வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனார்.

அவரது வீட்டிலிருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் 85 துப்பாக்கி ரவைகளும் பொலீஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. (ஒ-4)

பயிலுநர் ஆசிரியர்கள்

# பயிற்சிபெற்ற பாடத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்

பயிலுநர் ஆசிரியர்கள் எப்பாடநெறிக்கு பயிற்சி பெற்றனரோ அப்பாட நெறிக்கான இறுதிப் பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் இக் கோரிக்கையை தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரேமதாஸ உடகம ஏற்றுக் கொண்டுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சில பயிலுநர் ஆசிரியர்களை தோற்றிய பாடநெறிக்கு அனுமதிக்காது வேறுபாடநெறிக்கு விண்ணப்பிக்குமாறு யாழ் கல்வித்திணைக்களம் பணித்தமையால் எழுந்த பிரச்சினை தொடர்பாக இ. த. ஆ. சங்கத்தின் தலைவர் திரு. இ. வி. த. குமாரசுவாமி கடந்த வாரம் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடியபோது இம் முடிவு தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர் பட்டியலை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய கல்வி நிறுவனம் கோரியுள்ளது. (ஒ)

# வெப்பத்தை தணிப்பதற்கு கடலில் நீராடும் படையினர்!

குருநகர், மார்ச் 28

வடபகுதியில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் வெப்பம் காரணமாக ஸ்ரீலங்கா படையினர் கடலில் தினமும் நீராடி வருகின்றனராம்

பூநகரி- காஞ்ச காட்டுப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினரே அப்பகுதிக் கடலில் தினமும் பகல் வேளைகளில் குளித்து வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர். (ஒ-51)

ஆசிரிய சேவை சுற்றறிக்கை

# சில குறைபாடுகள் குறித்து அமைச்சருக்கு சுட்டிக்காட்டப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 28

இலங்கை ஆசிரியசேவையை அமுல் நடத்துவது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் சில குறைபாடுகளும், கருத்து தெளிவின்மைகளும் இருப்பதாகவும், அவற்றை இவ்வாரம் நடைபெறும் அமைச்சருடனான மாதாந்த சந்திப்பின் போது, தாம் சுட்டிக்காட்ட இருப்பதாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

டிப்ளோமா பட்டதாரிகள் விசேட பட்டதாரிகள், டிப்ளோமா பட்டம் பெற்ற விசேட பட்டதாரிகள் ஆகியோரின் சம்பளத் திட்டத்தில் சில வருடாந்தபடி உயர்ச்சிகள் நீங்கப்பட்டுள்ளமை வழமைக்கு முரணானதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமாகும்.

சகல பயிலுநர் ஆசிரியர்களும் நிரந்தரமாக்கப்பட்டு உள்வாங்கப்படுவார்கள் என உறுதியளிக்கப்பட்ட போதும் இவ் உறுதிமொழி காப்பாற்றப்படவில்லை.

இலங்கை ஆசிரிய சேவையின் வித்தியாசமான வகுப்புகளுக்கும் தரங்களுக்குமுரிய சமபளத் திட்டம் சுற்று நிருபத்தில் குறிக்கப்படவில்லை.

ஒவ்வொரு ஆசிரிய வகுதிக்கும் சம்பள மாற்றம் செய்வதற்கு ஓர் அட்டவணை சுற்று நிருபத்தில் இணைக்கப்பட்ட போதும் சேவைமூப்பு அடிப்படையிலா அல்லது தற்போது பெறும் சம்பளத் திட்டத்தின் அடிப்படையிலா சம்பள மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பது தெட்டத் தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

சம்பளமாற்று அமைப்பு தொடர்பான மாதிரிக்கடிதம் சுற்று நிருபத்தில் இணைக்கப்படவில்லை. இதனால் கோட்டங்களுக்கு கோட்டம் வித்தியாசமான சம்பளமாற்றுக் கடிதம் வழங்கப்படுவதற்கும் குறைபாடுகள் ஏற்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

மேற்படி குறைபாடுகள்சுற்று நிருபத்தை அவசர அவசரமாக இறுதி நேரத்தில் செய்யப்பட்டமையினாலேயே ஏற்பட்டது என இ. த. ஆ. சங்க பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

# பாதிக்கப்பட்டோர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதிக்கப்பட்டவர் விவரம் திரட்டும் பணி யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சில பிரிவுகளில் கடந்த 24ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. இதன் தொடர்ச்சியாக,

விவரம் திரட்டும்பணி நடைபெறவுள்ள மேலும் சில பிரிவுகள் வருமாறு:

இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதிவரை பாசையூர் கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்கு மேற்படி பிரிவு அலுவலகத்திலும் விவரம் திரட்டும் பணி நடைபெறும்.

இதேவேளை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் இன்று கரணவாய் கிராமசேவகர் பிரிவுக்கு மேற்படி பிரிவு அலுவலகத்திலும்—

எதிர்வரும் 30 ஆம் திகதி சமரபாகு கிராம சேவகர் பிரிவுக்கு மேற்படி பிரிவு அலுவலகத்திலும்—

31ஆம் திகதி உடுப்பிட்டி தெற்கு கிராம சேவகர் பிரிவுக்கு மேற்படி பிரிவு அலுவலகத்திலும்—

பாதிக்கப்பட்டோர் விவரங்கள் சேகரிக்கப்படும். (ஐ-14)

### புலிகளின் குரல் வானொலியில்

28 — 03 — 1995

செவ்வாய் இரவு

★ 8-02 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி

★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள் — தகவற் களஞ்சியம்

★ 8-20 — நலந்தானா?— "வயிற்றில் ஏற்படும் பிரச்சினைகள்" வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — கருத்துக் களம் — இ இராஜேஸ்வரன் எழுதிய "சுய முயற்சி"

★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

29 — 03 — 1995

புதன் காலை

★ 7-02 —மாவீரவணக்கம்

★ 7-15 நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சி தொடர்ச்சி

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

28 — 03 — 1995

செவ்வாய் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்

★ 5-02 — எழுச்சிக்கீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — தமிழிசை

★ 5-30 — வானொலி மதியூகம் -14

★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்

★ 6-02 — இவ்வாரம் இவர்

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6-20 — என் தெரிவு

### தோடம்பழ செய்கைக்கு கடன்

யாழ் மாவட்டத்தில் பழமர செய்கையினை ஊக்குவிக்கும்முகமாகதமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய நிதியத்தினூடாக உற்பத்தியாளருக்கு கடன் வழங்கி வருகின்றது.

அந்த வகையில் கடந்த மாதம் உடையார்வளவு, சுன்னாகத்தை சேர்ந்த ஒருவருக்கு தோடம்பழ செய்கையினை மேற்கொள்ளும் பொருட்டு 15 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டது. (இ)

### புகையிலை அமோகமாக விளைச்சல்

அராலி, மார்ச் 28

அராலிப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள புகையிலைப் பயிர் அமோக விளைவை கொடுத்துள்ளது. இப்பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான விவசாயிகள் சுமார் 18 ஹெக்டேர் பரப்பளவில் புகையிலை பயிர் செய்துள்ளனர்.

குடாநாட்டின் பலபகுதிகளில் புகையிலைப் பயிர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள போதும், இப்பகுதியில் அமோக விளைவு கிடைத்துள்ளது. (ஒ-12)

# ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம்

## மற்றும் சில பிரிவுகள்

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தில் தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்கள், தராதரப்பத்திரம் உள்ள ஆசிரியர்கள், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பெறாத பொதுப் பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆகியோரின் சம்பள விவரங்கள் 23-03-95 உதயனில் வெளி வந்திருந்தன.

மற்றும் சில பிரிவினர்களுக்கான சம்பளத் திட்டம் இங்கே தரப்படுகிறது.

1. பட்டப்பின் கல்வி டிப்பிளோமா பட்டம் பெற்ற பொது பட்டதாரிகள் (GENERAL GRADUATES WITH POST GRADUATE DIPLOMA IN EDUCATION)
2. பயிற்றப்பட்ட பொது பட்டதாரிகள் (TRAINED GENERAL GRADUATES)

| தற்போது பெறும் வருடாந்த சம்பளம் ரூபா | பயிற்றப்பட்ட சேவைக்காலம் | பெறப்போகும் புதிய சம்பளம் ரூபா |
|---|---|---|
| 39,540 | வருடம் 1 | 51,120 |
| 40,320 | வருடம் 2 | 52,320 |
| 41,520 | வருடம் 3 | 53,520 |
| 42,720 | வருடம் 4 | 54,720 |
| 43,920 | வருடம் 5 | 55,920 |
| 45,120 | வருடம் 6 | 57,120 |
| 46,320 | வருடம் 7 | 57.120 |
| 47,520 | வருடம் 8 | 58,560 |
| 48,720 | வருடம் 9 | 60,120 |
| 49.920 | வருடம் 10 | 61,680 |
| 51.120 | வருடம் 11 | 63,240 |
| 52,320 | வருடம் 12 | 64,8[illegible]0 |
| 53 860 | வருடம் 13 | 66 360 |
| 55.440 | வருடம் 14 | 67'920 |
| 57,000 | வருடம் 15 | 69,480 |
| — | வருடம் 16 | 71,040 |
| — | வருடம் 17 | 72,600 |
| — | வருடம் 18 | 80,400 |
| — | வருடம் 19 | 83 400 |
| — | வருடம் 20 | 86,400 |
| — | வருடம் 21 | 89,400 |
| — | வருடம் 22 | 92,400 |
| — | வருடம் 23 | 95,400 |
| — | வருடம் 24 | 98,400 |
| — | வருடம் 25 | 101,400 |

1. பட்டப்பின் டிப்பிளோமாப்பட்டம் பெறாத விசேட பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் (GENERAL GRADUATES WITHOUT POST GRADUATE DIPLOMA IN EDUCATION).
2. விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாயம்/ ஆங்கிலம் ஆகிய பாடங்களை பட்டப்பாடங்களாக கொண்ட பொதுப்பட்டதாரிகள். (GENERAL GRADUATES WITH SCIENCE/ MATHEMAT CS AGRICULTURE/ ENGLISH AS DEGREE SUBJECTS).
3. கல்விமானப்பட்டம் பெற்ற ஆசிரியர்கள்.

| | | |
|---|---|---|
| 39,540 | வருடம் 1 | 51 120 |
| 40,320 | வருடம் 2 | 52,320 |
| 41,520 | வருடம் 3 | 53.520 |
| 42,720 | வருடம் 4 | 54,720 |
| 43,920 | வருடம் 5 | 55,920 |
| 45,120 | வருடம் 6 | 57 120 |
| 46,320 | வருடம் 7 | 57,120 |
| 47,520 | வருடம் 8 | 57,120 |
| 48,720 | வருடம் 9 | 57,120 |
| 49,920 | வருடம் 10 | 57,120 |
| 51,120 | வருடம் 11 | 58,560 |
| 52,320 | வருடம் 12 | 60,120 |
| 53,880 | வருடம் 13 | 61,680 |
| 55,440 | வருடம் 14 | 63,240 |
| 57,000 | வருடம் 15 | 64,800 |
| — | வருடம் 16 | 66.360 |
| — | வருடம் 17 | 67 920 |
| — | வருடம் 18 | 69 480 |
| — | வருடம் 19 | 71,040 |
| — | வருடம் 20 | 72.600 |
| — | வருடம் 21 | 80.400 |
| — | வருடம் 22 | 83.400 |
| — | வருடம் 23 | 86,400 |
| — | வருடம் 24 | 89,400 |
| — | வருடம் 25 | 92,400 |
| — | வருடம் 26 | 95.400 |
| — | வருடம் 27 | 98,400 |
| — | வருடம் 28 | 101,400 |

1. பட்டப்பின் டிப்பிளோமாப் பட்டம்பெற்ற விசேட பட்டதாரிகள் (HONS GRADUATES WITH POST GRADUATE DIPLOMA IN EDUCATION)
2. பயிற்றப்பட்ட விசேட பட்டதாரிகள் (TRAINED HONS GRADUATES)

| | | |
|---|---|---|
| 42,720 | வருடம் 1 | 54.720 |
| 43,920 | வருடம் 2 | 55 920 |
| 45.120 | வருடம் 3 | 57,120 |
| 46.320 | வருடம் 4 | 57,120 |
| 47,520 | வருடம் 5 | 57,120 |
| 48.720 | வருடம் 6 | 57,120 |
| 48,920 | வருடம் 7 | 57,120 |
| 51,120 | வருடம் 8 | 58,560 |
| 52,320 | வருடம் 9 | 60,120 |
| 53,880 | வருடம் 10 | 61,680 |
| 55,440 | வருடம் 11 | 63,240 |
| 57,000 | வருடம் 12 | 64,800 |
| 58,560 | வருடம் 13 | 66,360 |
| 60 120 | வருடம் 14 | 67,920 |
| 61,680 | வருடம் 15 | 69,480 |
| 63,240 | வருடம் 16 | 71,040 |
| 64,800 | வருடம் 17 | 72,600 |
| 66,360 | வருடம் 18 | 80,400 |
| 67,920 | வருடம் 19 | 83,400 |
| — | வருடம் 20 | 86,400 |
| — | வருடம் 21 | 89,400 |
| — | வருடம் 22 | 92 400 |
| — | வருடம் 23 | 95,400 |
| — | வருடம் 24 | 98,400 |
| — | வருடம் 25 | 101,400 |

( 5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விற்பனை

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 28-3-95 இன்று கோல்டின் கொமற் பேட்டுக்குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம். சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் (Barக்கு முன்பாக). [35916]

### கோழிக் குஞ்சுகள்

துரித வளர்ச்சியடையும், [Loman] சேவல் குஞ்சுகள் 30-03-95இல் விநியோகிக்கப்படும். குஞ்சொன்றின் விலை ரூபா 15/- முன் கூட்டியே பதிவு செய்தவர்களும் பெற்றுக் கொள்ளலாம். மல்வம் விதியூடாக. சிங்கம் வீதி, உடுவில். [35893]

### மனித உயிரியல்

மனித உயிரியல் I கே. டி. அருட்பிரகாசம், வை என். ஏ. ஐயதுங்க விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [ஒ-640]

### வகுப்புகள்

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம் பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் (Silk Ribbon, Stocking Net Bouquets) புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது தொடர்பு: Yogi Home Science Academy நயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர் (சி 634)

### பெலகதிருமண சேவை

36 வயது. NonR C. பத்து வருடங்கள் ஜேர்மனியில் தொழில்புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் அங்கு அல்லது வெளிநாடுகளில் இருந்து தேவை. R C யும் விரும்பத்தக்கது விமலா, நாச்சிமார் கோயிலடி. [35915]

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 36 வயது. அரசாங்க உத்தியோகத்தருக்கும், 38 வயது. பிரான்ஸில் நிரந்தர வேலைபார்ப்பவருக்கும், 34 வயது. புராட்டஸ்தாந்து சிவில் என்ஜினியருக்கும் பணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜன்சி, கொய்யாத் தோட்டம். [35917]

## நடமாடும் சேவை

தென்மராட்சி, மார்ச் 28

யாழ் திருக்குடும்ப கன்னியர்மட நடமாடும் வைத்திய சேவையினர் பளை, முகமாலைப்பகுதியில் வாராந்தம் சனிக்கிழமைகளில் இலவச வைத்திய சேவையினை வழங்கி வருகின்றனர்.

முகமாலை அன்னைதிரேசா தேவாயத்துக்கு முன்பாக நடைபெறும் இவ் வைத்திய சேவையில் முகமாலை, இதிராபுரம், இத்தாவில், வேம்போடுகேணி மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் (ஒ-117)

## செத்தல் மிளகாய் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். குடாநாட்டில் செத்தல் மிளகாயின் விலை திடீரென சரிந்துள்ளது.

தற்போது ஒருகிலோ செத்தல் மிளகாய் 90ரூபா வாக விற்பனையாகின்றது. முன்னர் ஒருகிலோ மிளகாய் 200 ரூபாவுக்கு விற்கப்பட்டது இதேவேளை பச்சை மிளகாயும் தற்பொழுது கிலோ 20ரூபாவாக விற்கப்படுகிறது. (ஒ-17)

## சந்தாதோட்ட சந்தையை புனரமைக்குக

கொழும்புத்துறை, மார்ச் 28

நீண்ட காலமாக செயலிழந்து, உருக்குலைந்து போயுள்ள புலோலி தெற்கு "சந்தாதோட்ட" பொதுச் சந்தையை மீளப்புனரமைத்துக்கருமாறு கோரும் மகஜர் ஒன்று பருத்தித்துறை பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (ஒ-5-30)

---

பரிசுப் புதையல்

உங்களுக்காக

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

நடத்தும்

உற்பத்தி எழுச்சி வாரம் தொடர்பான

## பொது அறிவுப் போட்டி

**போட்டியின் நிபந்தனைகள்:**

1. தமிழீழத்தின் மக்கள் அனைவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். (வயது எல்லை இல்லை)
2. கீழே தரப்பட்டுள்ள 25 வினாக்களுக்கும் ஒரு முழுத்தாளில் விடைகளை தெளிவாக எழுதி 10-04-1995ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு முதன்மைச் செயலகம், மாவட்ட / கோட்ட / வட்ட அலுவலகங்களிலோ அல்லது அவ்வப்பகுதி உற்பத்திக் குழுக்களில் கடித மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.
3. விடைகளை தபாலில் அனுப்புவதாயின் கிராமிய உற்பத்திக்குழுப் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், முதன்மைச் செயலகம், தாவடி என முகவரியிட்டு அஞ்சல் உறையில் இட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. அனுப்புபவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி, வயது, மாணவராயின் கல்வி பயிலும் பாடசாலை போன்ற விவரங்களை தெளிவாக வேறொரு தாளில் எழுதி விடைத்தாளுடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. முடிவு திகதியின் பின்னர் விடைத்தாள்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. இப்போட்டியில் குறித்த புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான இரண்டாம் சுற்றுப் போட்டி வினாடி - வினாப் போட்டியாக நடத்தப்படும். இதற்கான விவரங்கள் நேரில் அனுப்பி வைக்கப்படும்.
7. குறித்த புள்ளிகளுக்கு மேல் தெரிவு செய்யப்படும் அனைவருக்கும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இரண்டாம் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு தங்கப் பதக்கம் உட்பட பெறுமதியான பல பரிசில்கள் மாவட்ட ரீதியாக வழங்கப்படும்.

கிராமிய

உற்பத்திக்குழு பகுதி

த. பொ. மே. நிறுவனம்,

அரசியல்துறை,

தமிழீழ விடுதலைப் புலிகள்,

தமிழீழம்.

## உற்பத்தி எழுச்சி வாரம் வினா - விடைப் போட்டி

01. தமிழீழத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?
02. கிராமங்களில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டு வரும் அமைப்பின் பெயர் என்ன? அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும், துறையையும் தருக.
03. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட கம்புத் தானியத்தின் தாவரவியற் பெயர் என்ன?
04. சூழல் பாதுகாப்புப் பகுதியால் பெரியளவில் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் சவுக்கங்காடு யாழ். குடா நாட்டில் எங்கு அமைந்துள்ளது?
05. தமிழீழத்தில் வெளிவரும் "காப்பரண்" என்னும் சஞ்சிகை எந்த வளத்தின் மேம்பாட்டை வெளிப்படுத்துகின்றது?
06. மீளக் காடாக்கல் தமிழீழத்தில் நகரம்வரை கொண்டுவரப்பட்டுள்ளது அவற்றிற்குரிய மிகப் பொருத்தமான சான்று ஒன்று தருக.
07. தமிழீழத்தில் துறைசார்ந்த வெளியீடுகள் பல உண்டு. பொருண்மிய மேம்பாட்டை வெளிக்கொண்டுவரும் சஞ்சிகையின் பெயர் என்ன?
08. தமிழீழத்தின் கரையோரப் பகுதி எவ்வளவு தூரத்தில் நீண்டு கிடக்கின்றது?
09. காய்கறி, இலைக்கறி வகைகளில் ஆகக் கூடிய புரதச சத்தைக் கொண்டுள்ளது எது?
10. தென் தமிழீழத்தில் அதிகளவில் காணப்படுகின்ற கொழுப்புச் சத்து அதிகளவில் கொண்டுள்ள பயன் தரும் மரம் எது?
11. உலகில் வாழை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் இடம் எது?
12. சேனைப் பயிர்ச்செய்கையின் மூலம் ஏற்படுகின்ற தீய விளைவுகளில் ஒன்று தருக?
13. 45 ஆண்டுகளில் 10 இலட்சம் ரூபா பெறும் சேமிப்புத் திட்டமும், 2000 ஆண்டளவில் 2 கோடி பனை ஆக்கும் திட்டமும் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
14. வட தமிழீழத்தின், தென் தமிழீழத்தின் நெற்செய்கை பரப்பளவு யாது?
15. தமிழீழத்தில் தன்னிறைவு மேலோங்க ஏற்றுமதி வாய்ப்புள்ள மூன்று உற்பத்திகள் எவை?
16. தமிழீழ மக்களின் அபிவிருத்திக்கென இதுவரை கோடிக்கணக்கான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் கிராம மட்ட நலன் பேணும் நிதியத்தின் பெயர் என்ன?
17. தமிழீழ அபிவிருத்திக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகள் எவை?
18. வட தமிழீழத்திலுள்ள நெற் செய்கை நிலப்பரப்பில் எத்தனை ஹெக்டயர் நிலத்தை உற்பத்திக்குக் கொண்டு வருவதன் மூலம் வட தமிழீழ நெற் தேவையை தன்னிறைவுக்குக் கொண்டு வரலாம்?
19. கிடைக்கும் ஒவ்வொரு துளி நீரையும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம் தேவையான நீர் வளங்களை இனம் காணவும், புதிய நீர் நிலைகளை உருவாக்கவும் ஏற்கனவே இருப்பவற்றை புனரமைக்கவும் த. பொ. மே. நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் என்ன?
20. வட தமிழீழத்தில் தற்பொழுது சகல தனியார் கைத்தொழில் நிறுவனங்களையும் பதிவு செய்தும், தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான உள்ளீடுகள் அல்லது கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்து இயங்காத நிறுவனங்களையும், கைவிடப்பட்டிருக்கும் நிறுவனங்களையும் இயங்க வைக்கும் முயற்சியில் செயற்படும் நிறுவனம் எது?
21. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கம் என்ன?
22. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எந்தெந்த நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்கி உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளித்துள்ளது? ஊக்கமளித்து வருகின்றது.
23. வருடா வருடம் நடைபெறும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் எவ்வாறத்தில், எம்மாதத்தில் நடைபெறுகின்றது?
24. புற்பாய் உற்பத்தியில் உள் நாட்டில் பயன்படுத்தப்படும் புல் வகையின் பெயர் என்ன?
25. ஆக்கி வாயுவில் காணப்படும் பிரதான இரசாயன [illegible]?

[சி-830]

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் குலசிங்கம் ராஜ்குமார்**

(Union Trust and Investments Ltd, Jaffna)

மலர்வு: 09 - 02 - 1964 உதிர்வு: 28 - 03 - 1989

நினையாத நேரம் அணைந்த குலவிளக்கே!
ஆண்டுகள் ஆறு மறைந்தாலும்
ஆறிடுமோ தம்பி எம் உள்ளம்
எந்நாளும் உங்கள் நினைவாலே உருகுதே -
எங்கள் மனம்.

பப்பா, அம்மா, அத்தான்,
தங்கை, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

மல்லாகம் வீதி,
கட்டுவன், தெல்லிப்பழை. [8398]

---

## நெஞ்சம் நீங்கா 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னவி அப்புக்குட்டி**

மலர்வு: 15 - 05 - 1924 உதிர்வு: 20 - 03 - 1993

திதி: 28 — 03 — 1995

வாழ்வோங்க வழிசமைத்த குன்றாவெம்
இதயக் குல விளக்கே
அணைந்தும் அணையாத சோதியாய்
மிளிர்கின்ற செஞ்சுடரே
ஈராண்டு மறைந்தாலும் மறையாவெம்
நெஞ்சத்து நினைவலைகள்
காட்டிய பாதைதனை என்றும்
மறவாதும் பெருமை காப்போமையா
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

— குடும்பத்தினர்.

சரஸ்வதி இல்லம்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [35907]

---

உ.

சிவமயம்

கந்தர்மடம் - ஆத்திசூடி வீதி

ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

நடத்தும்

"தமிழ் மகள்"

## ஔவையார் விழா - 1995

இரண்டாம் நாள் இன்று

28 - 03 - 95 செவ்வாய்க்கிழமை

மாலை 6-00 மணி

★ மங்கள இசை
சிவதாஸ் குழுவினர்
(உபயம் கி. இ. மகாலிங்கம், கந்தர்மடம்)

★ மங்கள விளக்கேற்றல்
திரு. வே. பொ. பாலசிங்கம்
(யாழ். மாநகரசபை ஆணையாளர்)

★ தமிழ்த்தாய் வாழ்த்து
திரு. தி. கருணாகரன்
(விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலை மன்றம்)

★ தலைமை
பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

★ தலைமை உரை

★ ஆசியுரை
வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்)M.A.

★ தொடக்கவுரை
திரு. புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம், தமிழீழம்)

★ சொற்பொழிவு
"ஔவை தமிழ்"
நிகழ்த்துபவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

ஔவையார் பாடல்களின் மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், பங்கு பற்றியோருக்கும் பரிசில் வழங்கல்

★ நிறைவுரை
திரு. த. கனகசபை
(உபதனாதிகாரி, ஆலய நிர்வாகம்)

★ நன்றியுரை;
திரு ந. நடராஜா
(தலைவர், ஆலய நிர்வாகம்)

★ கவியரங்கம்
பொருள்: 'ஆதாரமாய் - நம் அடிமைத் தளையறுக்க மூதாட்டி சொன்ன மொழி'

★ தலைவர்
கல்வயல் திரு. வே. குமாரசுவாமி

'ஒவ்வொருவர்க் கொவ்வொன்றெளிது' — செல்வன் ச. முருந்தன்
'எறும்பும் தல்கையால் எண்சாண்' — திரு. நாவண்ணன்
'கோடாமை கோடி பெறும்' — திரு. ஜெ. கி. ஜெயசீலன்
'ஊக்கமது கைவிடேல்' — செல்வன் த. சிவசங்கர்
'வாடியிருக்குமாம் கொக்கு' — செல்வன் த. ஜெயசீலன்
'என்று தருங்கொல் என வேண்டா' — திரு வை. க. தவமணிதாசன்
'அபாயம் ஒருநாளும் இல்லை' — செல்வி ப. நாமகள்

★ சுழலும் சொற்போர்

★ மையத்துறைபவர்
திரு. இ. ஜெயராஜ்
(அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்)

★ பொருள்
"ஔவைப் பாடல்களில் பெரிதும் போற்றப்படும் கருத்து"

கல்வி அல்ல தானமே; திரு. இரா. செல்வடிவேல்
தானம் அல்ல தவமே; திரு த. சிவகுமாரன்
தவம் அல்ல காதலே: திரு தி. திருநந்தகுமார்
காதல் அல்ல வீரமே: திரு. க குமாரதாசன்
வீரம் அல்ல மானமே: திரு. ஆ. திருமுருகன்
மானம் அல்ல கல்வியே: செல்வன் ஸ்ரீபிரசாந்தன்

★ உபயம்
C. சத்தியநேசன்
(இரட்டைப்புலி அப்பளம் உரிமையாளர்)

**முக்கிய குறிப்பு:**

இன்று செவ்வாய்க்கிழமை ஔவையார் விழாவை முன்னிட்டு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும். விசேட மேளக்கச்சேரியும் இடம் பெறும்.

உபயம்: புஸ்பா அன்கோ,
யாழ்ப்பாணம்

(35899) — விழாச் சபையினர்.

---

## இதய அஞ்சலிகள்

பளை, நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் சிரேஷ்ட தொழில் நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிய

**உயர்திரு சோ. சிதம்பரநாதன்**

அவர்களின்

திடீர்மறைவுக்கு

**எமது இதய அஞ்சலிகள்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

நிறைவேற்றுப் பொறியியலாளரும்,
ஊழியர்களும்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை'
பளை.

(35918)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## கிழக்கில் இரும்புக் கால்!

மட்டக்களப்பில் இப்போது இராணுவத்தினரின் தேடுதல்களும், சோதனைகளும் அதிகரித்து வருகின்றன.

தாம் யார் என்று அடையாளம் கூறியும் நகரத்தின் முதற் பிரசையான மேயரின் வீட்டையும் இராணுவத்தினர் இரவு நேரத்தில் அறை அறையாகத் துருவித் துருவி சோதனையிட்டிருக்கிறார்கள்!

அந்த அளவுக்கு அங்கு மக்களின் வாழ்க்கை பயங்கரமானதாகவும், நிம்மதியற்றதாகவும், ஆகிவிட்டது!

கிழக்கு இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி, அதனால் அங்கு மக்களுக்கு எல்லாம் கிடைக்கிறது. நிம்மதியாக வாழ்கிறார்கள் என்ற கருத்து வெளியே பரப்பப்பட்டுள்ளது.

ஆனால் அங்கு இராணுவ ஆட்சியின் கீழ் வாழ்வது போன்ற ஓர் அடக்குமுறை வாழ்வையே மக்கள் நடத்துகிறார்கள். தங்களுக்குத் தேவையான பாவனைப் பொருள்களைக்கூட இராணுவம் அனுமதித்தாலே, அவர்கள் அனுமதிக்கும் அளவையே எடுத்துச் செல்ல முடிகிறது. மொத்தத்தில் இராணுவ நிலையங்களில் நடத்தப்படும் சோதனைகளால் கிழக்குத் தமிழ் மக்கள் மீதும் மறைமுகமான பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தினை மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மிக வெளிப்படையாக அண்மையில் கூறினார். உண்மை நிலையும் அதுவே.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. விடுதலைப் புலிகளைத் தேடிக் கைது செய்ய வேண்டிய தேவை இராணுவத்துக்கு இல்லை. விடுதலைப் புலிகள் சந்தேகநபர்கள் என்று கூறி தமிழ் இளைஞர், யுவதிகளைக் கைது செய்து சித்திரவதை புரிந்து மனித உரிமை மீறல்களைச் செய்ய வேண்டியதும் இல்லை.

ஆனால், இராணுவத்துக்கு தனது ஆதிக்கத்தையும் அடக்குமுறையையும் தொடர்ந்து நடத்துவதற்கு மோதல் தவிர்ப்பு ஒரு தடையாகத் தெரியவில்லை! இத்தகைய கொடும் நிலையில் அரசு சமாதானத்தை எப்படி உருவாக்கப் போகிறது?

அரசாங்க நிர்வாகம் கிழக்கில் நடப்பதாகக் கூறப்படினும், அங்கு இராணுவ ஆட்சியே நடக்கிறது. பாடசாலைகளில் மாணவர் வரவுப் பதிவேட்டை நாளாந்தம் பரிசீலிக்கும் அளவுக்கு இராணுவ ஆதிக்கம் மோசமாகிஉள்ளது!

மாணவர் ஒருவர் ஒரு நாளைக்கு பாடசாலைக்குச் சமுகம் கொடுக்கவில்லை என்றால், அதற்கான காரணத்தைத் தெரிவித்துப் பாடசாலை அதிபருக்குக் கடிதம் கொடுப்பது தான் உண்மையான சிவில் நிர்வாகம். ஆனால் மட்டக்களப்புப் பகுதியில் மாணவனின் லீவுக் கடிதம் பொலீஸில் ஒப்படைக்கப்பட வேண்டும். அது அங்கிருந்துஇராணுவத்துக்கு அனுப்பப்படுகிறது!

இதற்குப் பெயர்தான் அரசாங்க சிவில் நிர்வாகமா? பாடசாலை நிர்வாகத்திலும், கல்விச் சேவையிலும் இராணுவம் தலையிடுகிறது, கை போடுகிறது என்றால் —

மட்டக்களப்பில், கிழக்கில் இராணுவ நிர்வாகம் — ஆட்சி — எந்தளவுக்கு ஆழமாக வேரூன்றி உள்ளது என்பதற்கு அதனைவிட வேறு அத்தாட்சியும் தேவையா?

பாதுகாப்பு என்ற பெயரில் மக்கள் வாழ்வின் எல்லாத் துறைகளிலுமே இராணுவம் தனது அடக்குமுறை என்ற இரும்புக் காலால் தமிழர்களை மிதித்து நசுக்குகிறது.

தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி ருசி கண்ட இராணுவம் அதனை கைவிடுவதற்கு ஒருபோதும் விரும்பாது. எவர்தான் பதவிக்கு வந்தாலும் கிழக்கில் ஓங்கி வளர்ந்துள்ள இராணுவ ஆதிக்கத்துக்கு அடங்கித்தான் ஆக வேண்டும்; ஆட வேண்டும்!

இந்த இலட்சணத்தில் கிழக்கில் சிவில் நிர்வாகமும், ஜனநாயகமும் நிலவுவதாகக் கூறிப் புதிய அரசும் ஊர், உலகத்தை ஏமாற்றுகிறது!

# சந்திரிகா - ராவ் சந்திப்பின்போது பிரபா விவகாரம் பேசப்படவில்லை

## இந்திய பத்திரிகைச் செய்திகளுக்கு கதிர்காமர் மறுப்பு

புதுடில்லி, மார்ச் 28

கடந்த சனிக்கிழமை இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்கும் விவகாரம் எதுவும் பேசப்படவில்லை.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் புதுடில்லி சென்றுள்ள குழுவில் இடம்பெற்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேச்சுக்களின்போது விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்கும் சாத்தியக்கூறு குறித்து கருத்துப் பரிமாறப்பட்டதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இது குறித்தே திரு. லக்ஷ்மன் கதிர்காமர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நீடித்தது தெரிந்ததே.

சனிக்கிழமைப் பேச்சுக்கள் குறித்து கொழும்புப் பத்திரிகைகள் நேற்று கருத்து வெளியிடுகையில் சமாதான முயற்சிகளுக்கு புதுடில்லியின் ஆதரவுக்கான அறிகுறிகள் தென்படுவதாகவும்—

பிரபாவை நாடு கடத்துவது குறித்து இந்தியா மௌனம் சாதிப்பதாகவும் தெரிவித்தன.

இதற்கிடையில் தமது இந்திய விஜயம் நூறு சதவீதம் வெற்றி அளித்துள்ளது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லியில் கருத்து வெளியிட்டுள்ளார். [இ]

## ஆபத்துக்கால ஊக்குவிப்பு பணம் விரைவில் கிடைக்கும்

1990 ஜூன்மாதம்தொடர்க்கம் டிசம்பர் வரைக்கான போர்க்காலத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில்சேவையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள், கல்வி அலுவலகர்கள், ஏனையகல்வித்திணைக்கள ஊழியர்களுக்கான ஆபத்துக்கால ஊக்குவிப்பு பணம் விரைவில் கிடைக்கும்.

கல்வி, உயர்கல்வி அமைச்சினால் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு இந்தப் பணம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் மாவட்ட பணிப்பாளர் ஊடாக வழங்கப்படும் எனவும் மாகாண அமைச்சு செயலாளர் தம்மைச் சந்தித்த இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

சங்கத்தின் தலைவர் வி. த. குமாரசாமிதலைமையில் திரு. த. பஞ்சலிங்கம், திரு. எஸ். கே. சதாசிவம் ஆகியோர் கடந்த வாரம் கொழும்பில் கல்வி அமைச்சு பரீட்சை திணைக்கள உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியபோது இத்தகவல் வெளியிடப்பட்டது.

### தவக்கால நாடகம்

குருநகர், மார்ச் 28

யாழ். திருமறைக்கலா மன்றம் வழமைபோல் இம்முறையும் தவக்காலத்தை ஒட்டி பிரமாண்டமான 'பாஸ்கா' நாடகத்தை மேடை யேற்ற உள்ளது.

''அன்பில் மலர்ந்த அமர காவியம்'' என்றும் (பக்தி இசை உரை) நாடகத்தில் 300 கலைஞர்கள் பங்கெடுப்பதாகவும்— 150 அடி மேடையில் இந்நாடகம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நாடகம் ஏப்ரல் மாதம் 6-ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் மாலை 6-45 மணிக்கு யாழ். பிரதான வீதி மன்ற அரங்கில் இடம் பெறும். (ஒ-51)

### அரைத்த உப்பு விலை குறைப்பு

மீன் பதனிடுவோரின் நன்மையைக் கருத்திற்கொண்டு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழிற்பகுதியின் உப்பு நிறுவனம் அரைத்த உப்பின் விலையை 09ரூபாவாகக் குறைந்துள்ளது.

இதுவரை 10ரூபா 50 சதம் ஆக விற்கப்பட்ட இவ்உப்பின்விலை கடற்தொழிலாளர்களின் நன்மை கருதியே குறைக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்கள் அவ்வப் பகுதிக் கடற்றொழில் சங்கங்களினூடாக நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தேவையான உப்பைப்பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

# தேர்தல் தொகுதிக்கு 100 வீடுகள்: தமிழ்ப்பகுதிகள் முற்றாக புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் தேர்தல் தொகுதி ஒன்றுக்கு 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப்பகுதி மாவட்டங்களில் புறக்ணிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருப்பதால் இத்திட்டத்தை தமிழ் பகுதிகளில் தற்காலிகமாக கைவிடுவது என்று அமைச்சு மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும்இது தொடர்பான உத்தியோகபூர்வ சுற்றறிக்கை எதுவும் இதுவரை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின்மாவட்ட அலுவலகங்களுக்குஅனுப்பி வைக்கப்படவில்லை என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைவட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-4)

## ஆசிரியருக்கு மே முதல் அதிகரிக்கப்பட்ட சம்பளம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

புதிய ஆசிரிய சேவைத் திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளம் எதிர்வரும் மே மாதத்தில் வழங்கப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன நேற்றுத் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நடந்த இலவச சீருடை வழங்கும் வைபவத்தில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த தம்மாலான பணியைச் செய்வார்கள் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் லீவு எடுப்பதைக் குறைத்துக் கொண்டால் உயர்ந்த தரத்துக்கு அவர்கள் பதவி உயர்வு பெற முடியும் என்றும் அமைச்சர் பத்திரன மேலும் கூறினார்.

### மினி பஸ் சேவை

வடமராட்சி, மார்ச் 28

பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி பருத்தித்துறையில் இருந்து நெல்லியடி ஊடாக யாழ். பல்கலைக்கழகத்துக்கு மினி பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் காலை 6.20 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்துக்கும்—

வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணிக்கு பல்கலைக்கழகத்தில் இருந்து பருத்தித்துறைக்கும் இந்த மினி பஸ் சேவை இடம்பெறும். (ஐ-173)

## பயங்கரவாதச் சட்டம் நீக்கப்பட வேண்டும்

### சபையில் முஸ்லிம் காங். எம்.பி

கொழும்பு மார்ச் 28

முன்னைய அரசு, பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி பல அப்பாவி இளைஞர்களை புலிகளாக்கி முகாம்களில் அடைத்து. இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாழ் மாவட்ட எம். பி. டாக்டர் ஐ. எம் இலியாஸ்.

இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சு மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம் பெற்றது.

அங்கு உரையாற்றிய போதே திரு. இலியாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால அரசின் ஆட்சியில் வடக்கு, தெற்கு பகுதிகளைச் சேர்ந்த பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் வெலிக்கடைச் சிறையிலும், பூஸா சிறையிலும், பூஸா தடைமுகாமிலும் மற்றும்பொலீஸ் நிலையங்களில்அமைக்கப்பட்ட ஏனைய தடை முகாம்களிலும் சிறைவைக்கப்பட்டு, சித்திரவதைப் படுத்தப்பட்டனர். அவர்களுள் நானும் ஒருவனாக இருந்துள்ளேன்.

சிறைகளில் சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் சார்ந்த பல்வேறு பிரிவினர் வயது வேறுபாடின்றி அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு இடம் கொடுத்த பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். [ஒ-5]

# சரியானபுள்ளிவிவரத்தகவல்மூலமே நாட்டின் வளம் கண்டறிய முடியும்

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திரட்டுகிறது

ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த அந்த நாட்டின் வளங்களைப் பற்றிய சரியான தகவல்கள் கண்டறியப்படுதல் அவசியமாகும்.

அந்த வளங்களைப் பற்றி மிகத் துல்லியமாகத் தகவல்களைச் சேகரித்துத் தொகுப்பதன் மூலமே வளங்களைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடியும்.

கண்டறியப்பட்ட வளங்களை உச்சப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதன் மூலமே அந்த நாட்டை முன்னேற்றகரமாக வளப்படுத்த முடியும். இவ்விதமான வளங்களைப் பற்றி துல்லியமான தரவுகளின் தொகுப்பே புள்ளிவிவரத் தரவுகள் என்று அழைக்கப்படும்.

### 2 வழிகளில் திரட்டலாம்

இந்த விதமான புள்ளிவிவரத் தகவல்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிவரக்கிளை திரட்டிச் சேகரித்து வருகின்றது. இந்த புள்ளி விவரங்களை இரண்டு வழிகளிலே திரட்டிச் சேகரித்து வருகின்றது. முதலாவது வழியாக ஏற்கனவே வெளிவந்துள்ள புள்ளிவிவர நூல்கள், பிரசுரங்கள், வெளியீடுகள், அறிக்கைகள் போன்றவற்றில் இருந்து அவசியமான தகவல்களைத் தேடி எடுத்துச் சேகரித்தல்.

இரண்டாவது வழியாக, தேவையான ஆளணியைப் பயன்படுத்தி நேரடியாக களத்துக்குச் சென்று தகவல்களைச் சேகரித்து எடுப்பதாகும்.

இவ்விதமாக இருவழிகளிலும் சேகரிக்கும் தகவல்களை ஒன்று திரட்டித் தொகுத்து அறிக்கைகள் தயார் செய்யப்படுகின்றது.

### மூன்றாக வகைப்படுத்த முடியும்

இவ்விதமாக சேகரித்துப் பெறப்படும் புள்ளிவிவரங்களை மூன்று வகையாக வகைப்படுத்த முடியும். அவை இயற்கைப் புவியியல் வளம், மனித குடித்தொகையியல் வளம், மனித சக்தியினால் உருவாக்கப்பட்ட உற்பத்தி வளம் என்பனவாகும்.

இயற்கைப் புவியியல் வளம் தொடர்பான புள்ளிவிவரங்கள் நேரடியாகத் தொடர்பு மூலம் பெறக்கூடிய தகவல்கள் அல்ல. இவை பெரும்பாலும் புள்ளிவிவர நூல்கள், அறிக்கைகள், வெளியீடுகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்ற அச்சிடப்பட்ட ஆவணங்களிலிருந்தும், இவை தொடர்பான அரச திணைக்களங்களிலிருந்தும் பெற வேண்டியவை.

இத் தகவல்களை பின்வரும் அம்சங்களாக வகுக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன.

1. நில, நீர், நிலை அளவு மதிப்பீடு (இதனோடு கண்ட மேடை அளவுகளும் அடங்கும்.)
2. நில வள மதிப்பீடு. (இதில் காட்டு வளங்களும் அடங்கும்.)
3. மழை வீழ்ச்சி ஒழுக்கின் அளவீடு.
4. வளி வெப்பநிலை அளவீடு.
5. சாரீரப்பதன் அளவீடு.
6. ஆற்று வடி நிலநீர் மதிப்பீடு, (இவற்றில் ஆற்றுப் படுக்கை, குடா போன்றவையும் அடங்கும்)
7. நில நீர் நிலைபற்றிய அளவீடு.
8. மண்வளம், கனியவளம் ஆகியவற்றின் ஆய்வுத் தகவல்கள்.

இந்த விதமான புவியியல் வளங்கள் பற்றிய தகவல்களை வைத்தே நீர்ப்பாசனத் திட்டங்கள், குடியேற்றத் திட்டங்கள், கைத்தொழில் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்த முடியும்.

இரண்டாவதாக மனித வளம் பற்றிய தகவல்கள் அரச புள்ளி விவரத்திணைக்களத்தினால் ஒவ்வொரு பத்து வருடங்களுக்கு ஒருமுறை குடிசனத்தொகை மதிப்பீடு என்ற பெயரில் செய்யப்பட்டு வருகின்றது.

கடைசியாக 1981 ஆம் ஆண்டு குடிசனத்தொகை மதிப்பீடு எடுக்கப்பட்டது. அதன் பின் சரியான முறையில் கணக்கீடு செய்யப்படவில்லை.

இந்தக் கணக்கீடு ஒவ்வொரு குடியிருப்பிலும் கணக்கெடுக்கப்படுவதுடன் குறிக்கப்பட்ட ஒரு நாளில் சகல இடங்களிலும் கணக்கிட்டு முடிவு செய்யப்படுகின்றது.

### மனித வளம் பற்றிய தகவல்

1991 ஆம் ஆண்டிலே இந்தக் கணக்கெடுப்பு அரச திணைக்களத்தினால் செய்யப்படாத போதும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காலத்துக்குக் காலம் பகுதிப் பகுதியாக தகவல்களைச் சேகரிக்கும் பொழுது மனித வளம் தொடர்பான தகவல்களையும் சேகரித்து வருகின்றது.

இந்த மனித வளம் பற்றிய தகவல்களை கீழ் கண்ட அம்சங்களில் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

1. குடிசனத் தொகையும் அதன் வளர்ச்சியும்.
2. பிறப்பு வீதமும், இறப்பு வீதமும்.
3. குடிசன அடர்த்தி.
4. தொழில் செய்வோர் விவரம்
5. எதிர்காலச் சனத்தொகை எதிர்பார்ப்பு.
6. மாணவர், ஆசிரியர், தொழில் முதலிய அடிப்படைத் தகுதிகள்.
7. அங்கவீனம் உள்ளோர் விவரம்
8. வீட்டு வசதி

மனித வளங்கள் பற்றிய புள்ளிவிவரங்களின் பயன்பாடு பாரிய தொழில் வாய்ப்புத் திட்டங்களைத் திட்டமிட மிகவும் உறுதுணையாக இருக்கும்.

மூன்றாவதாக மனித சக்தியினால் உருவாக்கப்படும் உற்பத்தி வளங்கள், நேரடியாக களத்துக்குச் சென்று பெற்றே சேகரிக்க வேண்டிய தகவல்களாகும். இவை காலத்துக்குக் காலம் வேறுபடுவதனால் தொடர்ச்சியான நடவடிக்கைகளாக தொடர்ந்து தகவல்களைச் சேகரிக்க வேண்டும். அப்போதுதான் அவை காலத்துக்கு உகந்த தகவல்களாக அமையும்.

இந்த உற்பத்தி பற்றிய புள்ளிவிவரத் தரவுகள் பின்வரும் அம்சங்களாக அமைகின்றன.

1. பயிர்ச்செய்கைத் தகவல்கள்.
2. கால்நடை வளர்ப்புப் பற்றிய தகவல்கள்.
3. பறவையின வளர்ப்புப் பற்றிய தகவல்கள்.
4. பனை, தென்னை எண்ணிக்கைத் தகவல்கள்.
5. பயன்தரும், பயன்தரா மரங்கள் பற்றிய விவரங்கள்.
6. பயிர்ச்செய்கைக்கு வேண்டிய நீர் அளவீடு, உற்பத்தி, விற்பனை, தேவை மதிப்பீடு.
7. கைத்தொழில் விவரங்கள் உற்பத்தி, சந்தைப்படுத்தல், தேவை மதிப்பீடு.
8. மீன்பிடி உற்பத்தி, சந்தைப்படுத்தல்.
9. சக்தி, மின்சாரம், எரிபொருள் தேவை மதிப்பீடு.

இத் தரவுகள் மக்களின் உணவுத் தேவைக்கான உற்பத்தித் திட்டங்களையும் மக்களின் தேவைக்கான கைத்தொழில் உற்பத்தித் திட்டங்களையும், சகல துறைகளிலும் தன்னிறைவை நோக்கி நகரக் கூடியதாக திட்டங்களையும் வகுக்க உதவுகின்றன.

உணவுத் தேவை தொடர்பான புள்ளிவிவரத் தரவுகளை, அரிசி, சிறுதானியம், பால் முட்டை, தேங்காய் போன்ற நுகர்வுப் பொருள்களின் மக்களின் தேவை எவ்வளவு? ஒரு வருட உற்பத்தி இலக்கு எவ்வளவு? உற்பத்தியில் பெறப்பட்ட தொகை எவ்வளவு? போன்ற தகவல்களை வருடா வருடம் சேகரிப்பதன் மூலமே உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி நகரக்கூடியதான திட்டங்களை வகுக்கக் கூடியதாக இந்த தரவுகள் இருக்கும். இவை அனைத்தும் நேரடித் தொடர்பு மூலமே பெற வேண்டிய தகவல்களாகும்.

கிராம ஆய்வு தொடர்பான புள்ளி விவரத் தகவல்கள் அந்தந்தக் கிராமங்களுக்குச் சென்று, மக்களுடன் தொடர்பு கொண்டு நேரடியாகச் சேகரிக்கப்பட்டு அவற்றிலிருந்தே அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

இவற்றோடு காலத்துக்குக் காலம், சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்புடையதாக புதிய புதிய புள்ளி விவரத் தகவல்களைச் சேகரிக்க வேண்டி ஏற்படுவதுண்டு.

இப்படியான புள்ளி விவரத் தகவல்களை நேரடித் தகவல் சேகரிப்பு மூலமே பெற வேண்டி இருக்கும். உதாரணமாக போர் காரணமாக புலம் பெயர்ந்து வாழ்வோர் விவரங்கள், இழந்த உடமைகள் விவரங்கள், சேதமடைந்த கட்டட விவரங்கள் அவர்களுக்கு ஏற்பட்ட தொழில் பாதிப்பு போன்ற தகவல்களைக் கூற முடியும். இவை அனைத்தையும் நேரடித் தொடர்பு மூலமே பெற வேண்டியிருக்கும்.

இவ் விதமான பல தரப்பட்ட புள்ளி விவரத் தரவுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு புள்ளி விவரக்கிளை, தனது செயற்பாடுகள் மூலம் சேகரித்து, தொகுத்து அறிக்கைகளாக காலத்துக்குக் காலம் வெளியிட்டு வருகின்றது.

புள்ளி விவரத் தரவுகள் தேவைப்படுவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன புள்ளி விவரக் கிளையுடன் தொடர்பு கொண்டு தமக்குத் தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ளலாம். (இ)

## ஆசிரியர்களுக்கான.....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

1. கனிஷ்ட பல்கலைக்கழக விஞ்ஞான/கணித/விவசாய/வணிக/ டிப்புளோமா பட்டம் பெற்ற ஆசிரியர்கள் [JUNIOR UNIVERSITY DIPLOMA IN SCIENCE/ MATHS/ AGRICULTURE/COMMERCE]
2. திறந்த பல்கலைக்கழக டிப்புளோமா பட்டம் பெற்ற கணித/விஞ்ஞான ஆசிரியர்கள் [DIPLOMA IN SCIENCE OF THE OPEN UNIVERSITY]

| | | |
|---|---|---|
| 30,060 | வருடம் 1 | 42,720 |
| 30,720 | வருடம் 2 | 43,920 |
| 31,380 | வருடம் 3 | 45,120 |
| 32,040 | வருடம் 4 | 46,320 |
| 32,700 | வருடம் 5 | 47,520 |
| 33,360 | வருடம் 6 | 48,720 |
| 34,140 | வருடம் 7 | 49,920 |
| 35,700 | வருடம் 8 | 51,120 |
| 36,480 | வருடம் 9 | 52,320 |
| 36,480 | வருடம் 10 | 53,520 |
| 37,260 | வருடம் 11 | 55,400 |
| 38,040 | வருடம் 12 | 57,000 |
| 38,820 | வருடம் 13 | 58,560 |
| 39,600 | வருடம் 14 | 60,120 |
| 40,380 | வருடம் 15 | 61,680 |
| 41,160 | வருடம் 16 | 63,240 |
| 41,940 | வருடம் 17 | 64,800 |
| — | வருடம் 18 | 66,360 |
| — | வருடம் 19 | 67,920 |
| — | வருடம் 20 | 69,480 |
| — | வருடம் 21 | 71,040 |
| — | வருடம் 22 | 72,600 |
| — | வருடம் 23 | [illegible] |
| — | வருடம் 24 | 75,720 |
| — | வருடம் 25 | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் சிதம்பரநாதன்

25 - 03 - 95 இல் காலஞ்சென்ற சோமசுந்தரம் சிதம்பரநாதன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் பெருந்தெருக்கள் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்) அவர்களின் ஈமக்கிரியைகள் இன்று (28 - 03 - 95) செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இவர் சட்டத்தரணி சோமசுந்தரம், பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் இந்திரா (ஓய்வுபெற்ற கணித ஆசிரியை இராமநாதன் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்கந்தனின் (மருத்துவ பீடம் 4ம் வருடம் கொழும்பு பல்கலைக் கழகம்) பாசமிகு தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இந்திரா சிதம்பரநாதன் [மனைவி]
சி. ஸ்கந்தன் (மகன்)

612, கே. கே. எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். [35914]

### திருமதி காசிபதி கனகரத்தினம்

அளவெட்டி தெற்கு, தம்மளையைச் சேர்ந்த திருமதி காசிபதி கனகரத்தினம் 26.3.95 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வி. கனகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஞானசோதி — சின்னத்தம்பி (கனடா), டாக்டர் ஞானசேகரம் (லண்டன்), திருமதி ஞானசக்தி - ஸ்ரீதரன் (கனடா), ஞானச்சந்திரன் (பொறியியலாளர் (லண்டன்) ஸ்ரீநிவாசன் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் அளவெட்டி தெற்கு மயானத்தில் அன்று மாலை 3 மணியளவில் நிறைவெய்தியது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தம்மளை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி [8300]

### அலபேட் முத்துநாயகம் ஸ்பென்சர்

[முன்னாள் சுழிபுரம், விக்ரோரியா கல்லூரி உதவி அதிபர்]

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான டேவிற் சலமோன் ஸ்பென்சர்-திருமதி அன்னப்பிள்ளை ஸ்பென்சர் ஆகியோரின் அன்பு மகன் அல்பேட் முத்துநாயகம் ஸ்பென்சர் 27.3.95 இல் கர்த்தருள் இளைப்பாறி விட்டார்.

இவரின் நல்லடக்க ஆராதனை [28.3.95] இன்று பி.ப 3 மணிக்கு "அன்ன வாசா" ஆக் [ARK] லேன், உடுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி. ருபினி ஸ்பென்சர் (பெறாமகள்)

40, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம். [35926]

### கார்த்திகேசு மார்க்கண்டு செல்வரட்ணம்

[இளைப்பாறிய தபாலதிபர்]

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மார்க்கண்டு செல்வரட்ணம் 26-3.95 இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சிவபாக்கியம், தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகதா (லண்டன்), சோபனா, ஜமுனா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் [லண்டன்], கமலநாதன், சுந்தரகுமார் [கனடா] ஆகியோரின் அருமை மாமனாரும், சித்ராங்கன் [கனடா], மாதங்கி [கனடா], காதம்பரி ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, மகேஸ்வரி, காலஞ்சென்ற வீரசிங்கம், துரைராஜா, சேனாதிராஜா ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அரசரட்ணம் மற்றும் யோகசௌந்தரி, சிவலோகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாவும் 27-03-1995 நேற்று தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. கமலநாதன் [அரி] [மருமகன்]

81, மானிப்பாய் வீதி,
தாவடி. [35928]

### செண்பகவரதர் சீவரத்தினம்

(அரசாங்க ஓய்வூதியர்)

அளவெட்டி பெருமாக்கடவையில் வசித்த செ. சீவரத்தினம் நேற்று (27-03-95) காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான செண்பகவரதர் - தங்கமுத்து தம்பதிகளின் புதல்வரும், மல்லாகம் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கோமளேஸ்வரி, வரதராஜா ஆகியோரினதும் மற்றும் ஜெகராஜன் (யாழ்.), மீனலோஜனி, மேகலா (கனடா), கமலாம்பிகா ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், சதாரூபவதியின் (யாழ்/ அரசினர் வைத்தியசாலை) அன்பு மாமனும் திகம்பனியின் பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அளவெட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
இ. கதிர்காமலிங்கம் J. P. (மைத்துனர்)

[8457]

# அரசு - புலிகள் சமாதானப் பேச்சு இந்திய உறவைப் பாதிக்காது

## "தூரதர்ஷன்" பேட்டியில் சந்திரிகா தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 28
விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் சமாதானப் பேச்சுக்கள் இலங்கை- இந்திய உறவைப் பாதிக்கமாட்டா.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா "தூரதர்ஷனுக்கு" அளித்த பிரத்தியேக பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"சார்க்" நாடுகளில் அரசியல் வன்முறைகளை தடுப்பது குறித்து ஆராய அந்த நாடுகளிடையே கூட்டு முயற்சி அவசியமாகும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா அந்தப் பேட்டியில் வலியுறுத்தினார்.

★ கேள்வி: உங்கள் அரசு விடுதலைப் புலிகளுடன் சமாதானம் செய்ய முயல்கிறது. அது இலங்கை - இந்திய உறவை ஏதேனும் வகையில் பாதிக்காதா?

★ சந்திரிகா: அரசாங்கங்களுக்கு இடையே அப்படி நான் நினைக்கவில்லை. பேச்சுக்கள் நட்புறவுடனும், பரஸ்பர புரிந்துணர்வுடனும் நடைபெற்றன.

★ கேள்வி: பிரபாகரனை நாடுகடத்தும்படி கேட்கப்பட்டால் உங்கள் அரசு என்ன செய்யும்?

★ சந்திரிகா: அத்தகைய கோரிக்கை எதுவும் இதுவரை விடுக்கப்படவில்லை. சட்ட நடைமுறைகள் பூர்த்தியாகவில்லை.

ஒருவர் குற்றவாளியாகக் காணப்படும் வரை அவரை நாடு கடத்துமாறு கேட்க முடியாது.

உங்கள் நாட்டில் அத்தகைய சட்ட நடை முறைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. பிரச்சினைகள் வரும்போது அவற்றை எதிர்கொள்வது பற்றி யோசிப்போம். (ஐ-உ)

## விளையாட்டு நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [ஐ-117]

★ ★ ★

அமரர் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்த்தர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் —

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — சென் நீக்கலஸ் அணி எதிர் பொற்பதி அணி

★ பிற்பகல் 4 மணி — சென் அன்ரனீஸ் 'ஏ' அணி எதிர் சென் மேரிஸ் 'ஏ' அணி.

★ ★ ★

சத்தியா விளையாட்டுக் கழகம் அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — ஞானமுருகன் 'பி' அணி எதிர் மல்லாகம் ஆர்.டி.எஸ். அணி.

★ பிற்பகல் 4 மணி — ஞானமுருகன் 'ஏ' அணி எதிர் அராலி கலைநகர் வி.க அணி (ஐ-20)

## இஸ்ரேல் விமானப்படை தளபதி இந்தியா விஜயம்

புதுடில்லி, மார்ச் 28
இஸ்ரேல் விமானப்படையின் தளபதி மேஜர் ஜெனரல் பேர்சில் பொடின் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

அவரது இந்திய விஜயம் எப்போது இடம்பெறும் என்பது குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனினும் அடுத்த வாரம் அவரது விஜயம் இடம்பெறும் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள இந்திய விமானப்படைத் தளத்துக்கும் ஆக்ராவில் உள்ள "பரசூட்" படைப் பயிற்சி நிலையத்துக்கும், ஹைதராபாத்தில் உள்ள மற்றொரு இராணுவப் பயிற்சி நிலையத்துக்கும் இஸ்ரேல் தளபதி விஜயம் செய்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் நாட்டு படைத்தளபதி ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருப்பது இதுவே முதல் முறை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## பேராதனை பல்கலைக் கழகத்தில் "ராகிங்" தொடர்பாக மாணவரிடையே மோதல்!

### ஒருவர் காயமடைந்தார்

கொழும்பு, மார்ச் 28
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "ராகிங்" சம்பவம் தொடர்பாக மாணவரிடையே இடம் பெற்ற மோதலில் விவசாய பீட மாணவர் ஒருவர் காயமடைந்தார். அவர் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சில நாட்களாக மாணவர்களிடையே 'ராகிங்' சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

"ராகிங்கில்" ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சி. என். மத்துமபண்டார மாணவர்களை எச்சரித்துள்ளார். (ஐ-3-6)

### விடுதலைப் புலிக—

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாணத்தில் தரை இறங்குபவர்களுக்கு கிளாலிப் பயணத்தின் ஆபத்துக்கள் புரியாது.

மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை ஸ்ரீலங்கா அரசு முதலில் தீர்க்கவேண்டும். அந்நிலையில் அரசியல பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் தயார்.

பல்லாயிரக்கணக்கான ஸ்ரீலங்கா படையினர் யாழ். குடாநாட்டைச் சூழவுள்ள முகாம்களில் குடிகொண்டு சுற்றிவளைத்து முற்றுகைக்கு உட்படுத்தியிருக்கும் நிலையில் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசின் மீது சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது. ஸ்ரீலங்கா படையினர் மீண்டும் போரை ஆரம்பித்தால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் அழிவு ஏற்படும்.

இதனால் மக்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ணமாகவே பூநகரிப் பாதையைத் திறக்குமாறு அரசிடம் கோரினோம்.

திம்புப் பேச்சுவார்த்தை முதல் பிரேமதாஸாவுடனான பேச்சுவார்த்தை வரை போர் இடைநிறுத்தம் மீறப்பட்ட சம்பவங்களே பேச்சுவார்த்தைகள் முறிவடையக் காரணமாக இருந்தன. தற்போதைய போர் இடைநிறுத்தம் நிரந்தர போர் நிறுத்தமாக மாற்றப்படவேண்டும் என்றார்

### நிலத்துள—

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணைக்கப் பட்டிருந்ததை அவதானித்த அவர் உடனடியாக விடுதலைப் புலிகளுக்கு அதுபற்றித் தகவல் கொடுத்தார்.

அக் கண்ணிவெடிச் சிலிண்டர் விடுதலைப் புலிகளால் பின்னர் மீட்கப்பட்டது. சிலிண்டரின் இரு பக்கங்களிலும் 'வயர்' கள் பொருத்தப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையானவர்கள் அப்பகுதியில் கூடி மீட்கப்பட்ட கண்ணிவெடிச் சிலிண்டரைப் பார்வையிட்டனர்.

### பிரபா—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிக்கொள்கிறோம் —

1995 மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில் —

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா, இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுத்துகொள்ள நிர்ப்பந்திக்கபபடுவோம் —

என்று தலைவர் பிரபாகரன் அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார்.

ஆனால் அரசாங்கம் தலைவர் பிரபாகரனின் கடிதத்தை கனதியானதாகக் கருதியதாகத் தெரியவில்லை. அதற்கு உரிய விதத்தில், ஆக்கபூர்வமான முறையில் பதில் அனுப்ப வேண்டும் என்று சிரத்தை கொள்ளவில்லை — என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

காலக்கெடு குறித்தும் பாரதூரமாக எடுக்காமல், அதனை தவிர்த்து நழுவல் முறையில், சமாளிக்கும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது எனறும் —

இது ஒரு முக்கியமான கடிதம் என்று மனதில் கொள்ளாமல் ஜனாதிபதி சந்திரிகா இந்தியா சென்று விட்டார்.

சமாதானப் பேச்சுக்கள் குறித்து முடிவு எடுக்க நேரிடும் என்று தலைவர் பிரபாகரன் அழுத்திக் கூறியிருந்த போதிலும்

அதனைப் பெரிய விடயமாக நோக்காத அரசின் போக்கு பேச்சுவார்த்தை மோதல் தவிர்ப்பு என்பன குறித்து பாதகமான நிலைக்கு இட்டுச் செல்லும் ஆபத்து உருவாகியுள்ளது. இதனை அரசாங்கம் கண்டு கொள்ளத் தவறியதன் விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும் என்றும் — அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டினர்.

தலைவர் பிரபாகரனின் கடிதத்தின் அர்த்தத்தை உரிய முறையில் சரியாக புரிந்து கொண்டு ஆக்க பூர்வமாகச் செயற்பட்டிருப்பின் இத்தகைய ஒரு நிலை தோன்றியிருக்காது — என்றும் அரசியல் நோக்குநர்கள் கருதுகின்றனர். (ஐ-3)

### மகளிர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் சில இளைஞர்கள் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் இந்த வேண்டாத செயலில் ஈடுபடுகிறார்கள் என்றும்—

இவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. [அ-7]

### அடுத்த...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவோர் அவர்கள் முதலில் நியமனம் பெறும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்றும் —

அதிகரித்த சம்பளப் பணம் மே மாதத்திற்கு முதல் வழங்கப்படும் என்றும் —

குறைந்த லீவுகளை எடுக்கும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகளில் முன்னுரிமைகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### பிரிட்டிஷ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அரசு ஓ.டி.ஏ உதவித்திட்டத்தின்கீழ் யாழ். பல்கலைக் கழகத்துக்கு ஆறு லட்சம் ஸ்ரேலிங் பவுண்ஸ் பெறுமதியான உதவியை வழங்க முன் வந்திருந்தது.

இந்த உதவிப் பொருள்கள் 90 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்டம்கட்டமாக கொழும்பை வந்தடைந்த போது ஸ்ரீலங்கா அரசு அவற்றை வேறு பல்கலைக்கழகங்களுக்கு வழங்கி வந்தது.

கடந்த வருடம் வந்த பொருள்களை இங்கு எடுத்து வர யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே குணரத்தினம் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக உதவிப் பொருள்கள் இங்கு எடுத்து வர அனுமதி கிடைத்துள்ளது.

"லங்கா முடித" கப்பலில் எடுத்துவரப் படும் இப்பொருள்கள் நாளை மறுதினம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என தெரிவிக்கப் பட்டது.

இந்த உதவிப் பொருள்களில் ஒரு மினிபஸ், 35 கணணிகள், குளிரூட்டிகள் ஒளிப்பட கருவி றோணியோ, மற்றும் மருத்துவ உபகரணங்கள் அடங்கும். (ஐ-3)

### வின்னியை மண்டேலா பதவி நீக்கினார்

தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பிரிந்து வாழும் தமது மனைவியான திருமதி வின்னி மண்டேலாவை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியுள்ளார்.

நெல்சன் மண்டேலாவின் அரசில் கலை, பண்பாட்டு விஞ்ஞான, தொழில் நுட்பதுறை அமைச்சராக வின்னி மண்டேலா பதவி வகித்து வந்தார்.

திருமதி வின்னி மண்டேலா அதிகாரத் துஷ்பிரயோகம், மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று ஜனாதிபதி நெல்சன் மண்டேலா குற்றஞ்சாட்டியுள்ளார் (ஐ-6)


யாழ். றோட்டறிக் கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும்

மாபெரும் அஞ்சலோட்ட நிகழ்வு

RELAY CARNIVAL

எதிர்வரும் ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை மாணவ / மாணவியருக்கு!
19 வயதின் கீழ்
17 வயதின் கீழ்
15 வயதின் கீழ்
மற்றும்
கழக வீரர்கள், வீராங்கனைகளுக்கு

மேலதிக விவரங்களைப் பெற:
செயலாளர்
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்,
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்.
யாழ். றோட்டறிக் கழகம்.

(சி-827)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா இளையதம்பி

வேலணையைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு ஆடியபாத வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இளையதம்பி காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கார்த்திகேசு இளையதம்பியின் அன்பு மனைவியும், க. அன்னலெட்சுமியின் அருமைத் தாயாரும் [Holland]. நாகலிங்கம் கனகசபாபதியின் [இளைப்பாறிய அதிபர் - Holland] அன்பு மாமியும், சகுந்தலாதேவி, கலைச்செல்வன் [Holland], கலைக்குமார் [Holland], கலைச்செல்வி, கலையரசி, கலைமதி, காலஞ்சென்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர் க. சிவபாலசிங்கம், இ. அசோக்குமார் [இலங்கை வங்கி], வ. செல்வநாயகம் [அதிபர் - மாங்குளம்], எஸ்தர் [Holland] ஆகியோரின் பேர்த்தியும், சி சிவாஜினி [கொ. இ. கல்லூரி], சிவேந்தினி [செ. இ. க], சிவதேவன் [கொ. இ. க], சிவதர்சன் [கொ. இ. க], சி. சிவதர்ஷனி [கொ. இ. க.], செல்வானா [Holland], சபாஜன் [Holland], ஜனுபா, நிருபா, கீர்த்திகா, நிலக்ஸன், நிரோஜன், பிரசாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [28-3-95] செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:
S. தேவி [பேர்த்தி]

சேச்சிற்கு முன்பாக,
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. [35925]

### இ. பஞ்சாட்சரம்

(உரிமையாளர், சிவசக்தி ஸ்ரோஸ், நெல்லியடி)

நெல்லியடி, சிவசக்தி ஸ்ரோஸ் உரிமையாளர் இ. பஞ்சாட்சரம் காலமானார்.

அன்னார் ப. தெய்வானைப்பிள்ளையின் (ஆசிரியை) கணவரும், தயாபரன், திருமதி தேவகி சிவராசா, பகீரதன் [கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி], வரதன் ஆகியோரின் தந்தையும், பா. சிவராசா [லண்டன்], திருமதி த. ஜெகதீஸ்வரி ஆகியோரின்மாமனாரும், சஞ்சயன், நிரோசன், உதயசங்கர் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் நேற்று (27- 3 -95) குடும்ப மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
ப. தயாபரன்
அமைப்பாளர், கம்பன் கழகம் [வடமராட்சி]

நெல்லியடி ம. ம. வி. வீதி,
கரவெட்டி [35919]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org